புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

ௐ

# இந்துசாதனம்

SUPPLEMENT TO THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

புத்தகம்—சஅ } யாழ்ப்பாணம்:— தாதுஷூ ஆனிமீ உ௨ ( 1936 ஜூன் 15 ) திங்கட்கிழமை { இலக்கம்—கக

## கந்தபுராணக் கவிநுட்பம்

### சைவத்தின் மேன்மை

### மேன்மைகொள் சைவநீதி என்பதற்குக் காரணம்.

வான்முகில் வழாது பெய்க
 மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
 குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க
 நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி
 விளங்குக உலக மெல்லாம்.

இ—ள்: உலகம் முழுவதும் ஆகாயத்திற் சஞ்சரிக்கின்ற முகில்கள் தவறாது மழைபெய்குக, நிறைவான செல்வங்கள் பெருகுக, அரசன் செங்கோன் முறைப்படி அரசு புரிகுக, ஆன்மாக்கள் எவ்வகையான முட்டுமில்லாமல் வாழுக, நான்கு வேதங்களிலும் சொல்லப்பட்டனவாகிய தருமங்கள் விருத்தியடைகுக, நல்ல தவங்களும் யாகங்களும் ஓங்குக, முதன்மையுடையதாகிய சைவசமயக் கோட்பாடுகள் விளக்கமுறுக எ—று.

'உலகமெல்லாம்' என்பது கடைநிலைத்தீபகமாதலின் அதனை ஏனையவற்றோடுஞ் சேர்த்துப் பொருள் கொள்க. இது வாழ்த்துக் கூறியவாறும். வழாது பெய்தல் – மாசம் மும்மாரி தவறுதலின்றிப் பெய்தல்; குறைவான மழை வீழும்போது தூறுதல் எனவும், அதிக மழை வீழும்போது பொழிதலெனவும் தமிழுலகஞ் சொல்லுதல் வழக்காதலினால், அற்ப மழையும் அதிக மழையுமில்லாமல் காலமழை போதிய அளவு வீழ்தல்வேண்டுமென்னுங் குறிப்புத் தோன்ற "பெய்க" எனக் கூறினர்போலும்.

மழை காலந்தவறாது பெய்தலினால் நாட்டிலே வளம் பெருகும்; வளம் பெருகவே அரசன் தன் நாட்டிற் பஞ்சம் பசியில்லாமற் குடிகளை நீதியாக ஆளுதல்கூடும். செங்கோன் மன்னனின் கீழுள்ள சனங்கட்கு அரசனாகிய தன்னாலும் தன் பரிசனராலும் பகைவராலும் கள்வராலும் வனவிலங்குகளாலும் ஆன பயம் ஐந்தும் பிணி வறுமையென்னுமிவைகளு மில்லையாகும். எவ்வகையான குறைகளுமில்லாமற் சனங்கள் வாழும்போது அவர்கள் வைதிக தருமங்களையும் நல்ல தவம் ஜபம் ஓமங்களையும் செய்தல் சாலும். இவைகளெல்லாம் இனிது விருத்தியாகவே இச் சற்சனர் அநுட்டிக்குஞ் சைவசமய ஆசாரங்கள் குறைதலின்றி எவர்மாட்டுஞ் செறிந்து விளங்கும். இனி உலகமெல்லாம் சைவநீதி விளங்குக என்பதற்கு உலகத்தின்கண்ணேயுள்ள மன்பதைகள் எவராலும் சைவமார்க்கக் கொள்கைகள் விளங்கப் படுமனவாக என்னுங் கருத்துத் தோனிக்க வைத்தமை ஆசாரிய சுவாமிகளின் கவி நுட்பங்களுள் ஒன்றென்று கொள்ளலாமல்லவா!

இத் திருவிருத்தத்தின்கண்ணே வான்முகில் வழாதுபெய்தல் முதலியன ஒன்றிற்கொன்று காரண காரியமாக திற்றல் மேலே விளக்கப்பட்டது.

இந்த வாழ்த்துத் திருவிருத்தம் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருவாய்மலர்ந்த:-

"வாழ்க வந்தணர் வானவ ரானினம்
 வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## கள்ள நாணயச் சாலை

நாகபுரி, (தபால்) — மருந்து வியாபாரிகள் கொடுத்த தகவலின் மேல் நாகபுரி ரகசியப் பொலிஸார் ராஜநந்தகான சமஸ்தானத்திலுள்ள உபர்வாய் என்ற கிராமத்திற்குச் சென்று கள்ள நாணயச் சாலை ஒன்றைக் கண்டுபிடித்தனர். அவர்கள் 2 பேரைக் கைதுசெய்தனர். டஞ்சாபில் மற்றும 9 பேரைக் கைதுசெய்து நாகபுரிக்கு அழைத்து வந்தனர். இவர்கள் மூல்டானி மண் மூலம் செய்த அச்சையுப் உலோகங்களை உருக்குவதற்கான முறை யடங்கிய காகிதத்தையும் கைப்பற்றினர்.

## உயர்தரமான சம்பாஷணையில் உள்ள இன்பம்

### மிஸ்ரர். ஓயாமாரிமீது நமக்குவெறுப்பு உண்டாகிறது

### பேச்சில் ஆண்களைவிடப் பெண்களே மகா சமர்த்தர்களாம்

எந்த நேரத்தில், யாரிடம், எவ்வாறு சம்பாஷிக்க வேண்டும் என்பதும்பற்றி மகா சன். டீன் இஞ்ஜ் எழுதியுள்ள கட்டுரை ஒன்று தமிழ் முறையைத் தழுவி மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அது வருமாறு:—

மௌனம் ஸர்வார்த்த சாதகம்; மௌனம், கலக நாஸ்தி; "யாகாவாராயினும் நா காக்க காவாக்காற் சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு" எனநமது ஆன்றோர்கள் நாவையடக்க வேண்டியதன் அவசியத்தைப் முது மொழிகளால் வற்புறுத்திக் கூறியிருக்கின்றனர். இதேபோன்ற பழமொழிகள் பல மொழிகளிலும் காணப்படுகின்றன. எனினும் உயர்தரமான சம்பாஷணையில் ஏற்படும் இன்பத்தை யாரும் மறுக்கமாட்டார்கள். உண்மையில் பேச்சிலே இன்பம் பெற வேண்டுமாயின், பேச்சு மிதமிஞ்சியதாக இருக்கக் கூடாது என்பதையே மேற்படி முதுமொழிகள் வற்புறுத்துகின்றன. சம்பாஷணை யென்பது ஒரு கலை. மற்றக் கலைகளின் மூலம் நாம் இன்பம் பெறுவது போல இப்பேச்சுக் கலையினிருந்தும் இன்பம் பெறலாம். ஆகலின், சம்பாஷணை கலையின் லட்சணங்களோடிருந்தால் மாத்திரமே இன்பம் பயக்கும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

சம்பாஷணையில் நாம் ஐந்து விஷயங்களை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். யாரைப்பற்றி அல்லது எதைப்பற்றிப் பேசுகிறோம் என்பது ஒன்று. யாரிடம் பேசுகிறோம் என்பது இரண்டாவது. எங்கே? எப்பொழுது? என்ன சந்தர்ப்பத்தில் பேசுகிறோம் என்பன மற்றவை

பேசுகிறவர்களில் பல வகையினர் உளர். முதலாவது மிஸ்ரர். ஓயாமாரி; இவர் பேச ஆரம்பித்துவிட்டால் நிறுத்தமாட்டாரா என்று நாம் கடவுளைக் கும்பிடுகிறோம். இவருடைய பேச்சு நமக்கு விரைவில் களைப்பை யுண்டாக்குகிறது மறுமுறை அவரைக் கண்டால் எப்படியாவது அவர் கண்ணிற் படாமல் போய்விட முயற்சி செய்கிறோம்.

நான் சொல்வதைக் கேள் என்ற தோரணையில் பேசுகிறவர்கள் ஒரு இனத்தார். இவர்கள் ஓய்வின்றிப் பேசாவிடினும் ஏதேனும் சம்பாஷணை தொடங்கினால் அதில் தங்களுடைய அபிப்பிராயமே முடிவானதாக அங்கீகரிக்கப்பட வேண்டுமென்று விரும்புவார்கள். தங்களுடைய பேச்சை மற்றவர்கள் ரசிக்கிறார்களா என்பதைப்பற்றி இவர்கள் கவலைப்படுவதில்லை இவர்கள் தங்களுடைய திருப்திக்கே பேசுகிறார்கள். இவர்கள் பிரசன்னமாயிருக்கும்பொழுது மதம், ராஜீயம் முதலான விவாதத்திற்கிடமான சம்பாஷணை யேற்பட்டுவிட்டால் இவர்களுக்கு உஷ்ணம் கிளம்பிவிடும். கைகலந்து விடாமலிருக்க வேண்டு

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## ஒருவரம்

[முற்றொடர்]

இராகம் - சகானா—தாளம் - ரூபகம்

பல்லவி.

இந்த ஒருவரம் தந்தருள் புரிகுவை
ஈசா ஆ ஜெக தீசா

அநுபல்லவி.

எங்கெந்தப் பொருளிலும் சந்ததம் பொலிகின்ற
ஏகனே சர்வ போகனே
பாகனே உயர்த் யாகனே எனக்கு (இந்த)

சரணங்கள்.

5. ஒப்பி மனசைவிற்று முப்பழம் உண்பதிலும்
தப்பில்லா வேலைசெய்து உப்பில்லாக் கூழுண்பதே
உத்தமம் எனும் சத்தியத்தினை
சித்தமென்றுமி ருத்திவைத்திடும் (இந்த)

6. இச்சகம் பலபேசி மெச்சப் பிறர்கொடுக்கும்
எச்சிலை யுண்பதினும் பிச்சையே டுப்பதுமேல்
என்றநீதியில் எந்தன் நாட்டினர்
ஒன்றியேயவர் என்றும் வாழ்ந்திடும் (இந்த)

7. அதிகாரம் பண ஆசை அதனாலே மதமேறி
மதியாமற் பெரியோரைச் சதிபேசிக் களிக்காத
எண்ணமேவரப் பண்ணுவாயெனப்
புண்ணியாஉனை நண்ணுவேன்தினம் (இந்த)

— வரும்

— நாமக்கல் திரு. வெ. இராமலிங்கம்பிள்ளை

# குழந்தைகளைப் பழக்கும் முறை

## அவர்கள் குடும்பக் காரியங்களில் ஈடுபடவேண்டும்

## குடும்பத்தில் பரஸ்பர நேசம் அதிகரிக்கவேண்டும்

இக்காட்டில் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு வேண்டியவற்றையெல்லாம் பிறர் செய்யவேண்டுமென்று கருதுகிருர்கள். குழந்தைகளை இளம் பிராயத்திலிருந்தே இவ்வாறு வளர்ப்பது பெருந் தவறென்பது என் அபிப்பிராயம். சாதாரணமாக எந்த வீட்டிலும் நீங்கள் கவனித்துப் பாருங்கள். நான் முழுதும் அதிகாரத் தொனியிலோ தீனமான குரலிலோ "ஆயா!" "பொடியன்!" "அப்பு!" என்ற சத்தங்கள் அடிக்கடி கேட்கும். தங்களுக்குக் கீழ்ப்பட்டவர்கள் என்று கருதப்படுவோர்களை அதிகாரம் செய்வது சிறு குழந்தைகளுக்கு இயற்கையாக ஏற்பட்ட குணமன்று. பெரியவர்களின் வழக்கத்தைப் பின்பற்றியே குழந்தைகள் அவ்வாறு செய்கிருர்கள். எத்தனையோ பெண் குழந்தைகள் பொடியன் மாதிரித் தானும் மேஜையைத் துடைத்துச் சுத்தப் செய்ய வேண்டுமென்று ஆசைப்படுகின்றன. நீங்கள் ஏன் தடுக்கிறீர்கள்? மழை நேரங்களில் மற்றக் குழந்தைகள் என்ன செய்வதென்று தெரியாமல் சோம்பலுடன் படுத்திருக்கையில் ஒரு நாலு வயதுக் குழந்தை மும்முரமாக மேஜையைத் துடைத்துத் தூசினைப் போக்கிக் கொண்டிருக்கிறது அதற்கு அவ்வேலை ஒரு விளையாட்டு உண்மையில் இதில் சிறிது தேகப் பயிற்சி ஏற்படுகிறது. பளபள வென்று துலங்கும் மேஜையைக் கண்டு பரம சந்தோஷம் அடைகிறது! பல குழந்தைகளுள்ள ஒரு குடும்பத்தில் ஒன்று அல்லது இரண்டு வேலைக்காரர்கள் மட்டும் இருந்தால் ஒவ்வொரு குழந்தையும் தன் படுக்கையைச் சுருட்டி வைக்கவும் பிறகு உதறி விரித்துக்கொள்ளவும், படுக்கையறையைப் பெருக்கிச்சுத்தமாக வைத்துக்கொள்ளவும் கற்றுக்கொடுக்கலாம் இவ்வாறு இளமையிலே பயிற்சி பெறும் குழந்தைகள் பிற்காலத்தில் தங்கள் பாடசாலை வேலைகளை ஒழுக்காகவும் முறையாகவும் செய்ய இயலும். இசைவுற் கீழ்ப்படிதல், தனது பொருள்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ளுதல், ஆகிய குணங்கள் அவர்களிடம் படிகின்றன.

சிறுவர்கள் ஊசி நூலைக் கொண்டு தையல் வேலை செய்யவேண்டுமென்றால் பலர் கேலியாகச் சிரிக்கக்கூடும். ஆனால் பல குடும்பங்களில் சிறுவர்கள் விளையாடும்பொழுது கீழே விழும் பொத்தான்களைக் கருத்துடன் எடுத்துப் பையிற் போட்டுக்கொண்டு பிறகு தானே அதைச் சட்டையில் தைத்துக் கொள்வதைப் பார்த்திருக்கிறேன் வண்ணனுடைய தவறுல் பொத்தான் போயிருந்து சிறுவனுக்கும் வேறு முக்கியமான வேலையிருந்தால் அப்பொழுது தாயாரோ ஆயாவோ தைத்துக் கொடுக்கவேண்டியதே

குழந்தைகளை அடிக்கடி அதட்டுவதும அவர்கள் செய்யும் காரியங்களில் குற்றம் கண்டுபிடிப்பதும் விரும்பத்தக்கதல்ல. இதற்குத் தேவையுமில்லை. குழந்தைகளுக்கு இலகுவான சில அலுவல்களைக் கொடுத்து, அவ்வேலைகள் செய்யப்படாமலிருந்தால் அன்பாக ஞாபகமூட்டி உற்சாகப்படுத்தினுல் வேலைகள் ஒழுங்காக நடைபெறும். அறைகளில் புஷ்பக்கும்பங்களை ஒழுங்காக வைக்கவேண்டிய வேலையை ஒரு 12 வயதுச் சிறுவனிடம் கொடுங்கள். தினம் அழகிய புதிய மலர்களுடன் கும்பங்கள் சேர்த்தியாக வைக்கப்படுகிறதென்றும் அவனே அத்தனை சேர்த்திக்கும் காரணமென்றும் தாய் புகழ்ந்து கூறுவாளாயின், சிறுவன் அதிக உற்சாகமடைகிருன். தனக்கு அதிகமான பொறுப்பும் கௌரவமும் ஏற்பட்டு விட்டதாகக் கருதி முன்னிலும் பதின் மடங்கு சிரத்தையுடன் தனக்குரிய வேலையைச் செய்வான்.

குழந்தைகள் குடும்பக் காரியங்களில் ஈடுபட வேண்டும். குடும்ப வேலைகளைச் செவ்வையாகச் செய்து முடிப்பதில் தனக்கும் பங்கு வேண்டும் என்ற ஆசையை முதலில் குழந்தைகளுக்கு நாம் ஊட்டவேண்டும். சிறிய வேலையில் ஆரம்பித்துக் கிரமமாகப் பெரிய வேலைகளிலும் சிறுவர்கள் பங்கெடுத்துக் கொள்ளும்படி செய்யவேண்டும். இதனுல் குழந்தைகளிடம் கட்டுப்பாடும் ஒற்றுமையும் விருத்தியடையும் இதன் விளைவாகக் குடும்பத்தில்பரஸ்பரவாஞ்சையும் நேசமும் அதிகரித்துக் குடும்ப வாழ்க்கையில் உண்மையான சுகம் பெறக்கூடும்.

## கந்தபுராணக் கவிநுட்பம்

(1-ம் பக்கத் தொடர்)

ஆழ்க தீயதெல் லாமா னுமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே"

என்னுந் திருப்பாசுரத்தின் கருத்தினை அகத்துட்கொண்ட தென்பதை ஈண்டு ஆராய்வாம்:-

"வான்முகில் வழாது பெய்க" என்றதனுல் "வீழ்க தண்புனல்" என்பதும், அந்தணர் யாகஞ் செய்வதற்கும் வானவர் ஆகுதி பெறுதற்கும் பஞ்சகௌவியத்தைப் பசுக்கள் பயப்பதற்கும் காரணமு தவறுது பெய்யும் மழையின் பயனாகவந்த மலிவளமேயாக, "மலிவளஞ்சுரக்க" என்றதனுல் "வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்" என்பதும், "கோன்முறையரசுசெய்க" என்றதனுல் "வேந்தனுமோங்குக" என்பதும், "குறைவிலா துயிர்கள் வாழ்க" என்றதனுல் "வையக முந்துயர் தீர்கவே" என்பதும், "நான மறை யறங்கள் ஓங்க நற்றவ வேள்வி மல்க" என்றதனுல் "வாழ்க அந்தணர்" என்பதும், "மேன்மை கொள் சைவநீதி விளங்குக" என்றதனுல் "அரனுமமே சூழ்க" என்பதும், மேலேசொல்லப்பட்ட நன்மைகளெல்லாம் ஓங்குக எனவே தீமைகளெல்லாம் நீங்குக என்பது இவ் வாழ்த்தில் அருத்தா பத்தியாற் பெறக் கூறியதனுல் "ஆழ்க தீயதெல்லாம்" என்பதும் பெறக்கிடத்தல் காண்க.

இனி, அறுவகைச் சமயங்களுள்ளுஞ் சிறந்ததாதலினுல் மேன்மைகொள் சைவநீதி யென்னப்பட்டது. சைவத்தின் மேன்மை:

"சைவசமயமே சமயம் சமயாதீதப் பழம்பொருளைக், கைவந்திடவே மன்றுள் வெளிகாட்டு மிந்தக் கருத்தை விட்டுப், பொய்வந் துழலுஞ் சமயநெறி புகுத வேண்டா முத்திதரும், தெய்வ சபையைக் காண்பதற்குச் சேரவாருஞ் செகத்தீரே"
எனவும்,

"சைவசமயஞ் சமயமெனில் அச்சமயத் தெய்வம் பிறைதுடுந் தெய்வமெனில்—ஐவரைவென்(று) ஆநந்தவெள்ளந் தழந்துவது முத்தியெனில், வானங்காள் பெய்மின் மழை"

எனவும் வரும் ஆப்த வாக்கியங்களால் விளங்குமென்க. "மேன்மை கொள் சைவநீதி" என இங்கே ஆசாரியசுவாமிகள் எடுத்துக் கூறியது சித்தாந்தசைவத்தையாகும். இதன் விரிவு மேலே ததிசிப்படலம் ததிசியுத்தரப் படலம முதலியவற்றிற் காணக்கிடக்கின்றது.

## உயர்தரமான சம்பாஷணையில் உள்ள இன்பம்

[1ம்பக்கத் தொடர்ச்சி]

மே என்று நாம் கவலைப்படவேண்டியதாயிருக்கும்.

மூன்ருவது வகை மனிதர்கள் அதிகமாகப் பேசுவதில்லை. நாலு பேர் பேசிக்கொண்டிருக்கும் பொழுது கேட்டு ஆனந்தப்படாமல் இவர்கள் தாமும் ஏதேனும் ஒன்றுசொல்லவேண்டுமென்று ஆசைப்படுகிருர்கள். இப்படிப்பட்டவர்கள் அபத்தமாக ஏதேனும் உளறுவது ஸகஜம். சிலர் நகைச் சுவையுடன் பேசுவதாக நினைத்துக் கொண்டு சம்பாஷணையின் இன்பத்தைக் கெடுத்துவிடுகிருர்கள சடைசியாக ஒரு சாரார் இருக்கின்றனர். இவர்கள் மிகவும் கூச்சப்பட்டவர்கள். வலிய இழுத்தாலும் இவர்கள் சம்பாஷணையில் இடல்பாக ஈடுபடுவதில்லை.

புரபெஸர் பேர்ல் எலிகளைக் கொண்டு ஒரு சோதனை நடத்தியிருக்கிருர். கூண்டுக்குள் ளிருக்கும் ஆண் எலி அதிகமாக நகர்வதில்லை. ஆனுல் பெண் எலி ஓரிரவிற்குள் 20 மைல் தூரம் கூண்டிற்குள்ளே சுற்றிச் சுற்றி வந்துவிடுகிறது. என்று அவர் கண்டு பிடித்திருக்கிருர். பேச்சை அளப்பதற்கு ஓர் கருவியிருந்தால் புருஷர்களைக் காட்டிலும் ஸ்திரீகள் குறைந்தது பத்து மடங்கு அதிகமாகப் பேசுகிருர்கள் என்ற உண்மையைக் கண்டுபிடிக்கக்கூடும். கதா காலக்ஷேபங்களுக்கு நாமும் செல்லுகிறோம். நமது தாய்மார்களும் வருகிருர்கள். நாம் பேசாமல் இருக்கிறோம். ஆனுல் பெண்கள பகுதியில் பல பிரத்தியேகக் காலக்ஷேபங்கள் நடந்துகொண்டிருப்பதைப் பார்க்கிறோம்

மகாத்மா காந்தி மௌன விரதம் அனுஷ்டிக்கிருர். அவரைப் பின்பற்றி எத்தனையோ பேர் மௌன விரதம் அனுஷ்டிக்கிருர்கள். 127 வருஷங்கள் மௌனமாயிருக்கும் சாமியார்களைப் பற்றி நாம் கேள்விப்படுகிறோம். ஆனுல் மௌனவிரதம் அனுஷ்டிக்கும் ஸ்திரீயைப் பற்றி யாராவது கேள்விப்பட்டதுண்டா? சாத்தியமில்லை! ஒரு பெண்ணுக்கு மௌனமாயிருக்கும்படி விதிக்கப்படுவதை விடக் கொடிய தண்டனை வேறொன்றும் கிடையாது.

பொதுவாக நியாயவாதிகள் சம்பாஷணைத் திறமையுடையவர்கள் இவர்கள் எல்லா விஷயங்களையும் பற்றிப் பேசுவார்கள் இதனுல் இவர்களுடைய பேச்சு ருசியாக இருக்கும். வியாபாரிகள் சம்பாஷணை மற்றவர்களுக்கு ருசியாக இராது. போசிரியர்களின் சம்பாஷணையில் அறிவு மிகுந்திருக்கலாம். ஆனுல் அவ்வளவு ருசியிராது. ஒரு தனவந்தர் தமது காரில் ரோட்டில் போய்க்கொண்டிருக்கிருரென்று வைத்துக் கொள்ளுவோம. அவர் பையில் ஆயிரம பவுன் வங்கிச் செக்கு இருக்கிறது. ஆனுல் சில்லறை இல்லை. ரோட்டோரத்தில் உள்ள சிறு கடையில் வெற்றிலை வாங்கவேண்டுமென்றுல் அவருடைய செக்குப் பயன்படாது. அது போலப் பேராசிரியர்களின் ஆரிய பேச்சுகள் கம்பைப் போலச் சாமான்ய ஜனங்களுக்கு இன்பம் கொடுக்கமுடியாது.

சந்நியாசிகளோடும் குருமார்களோடும் செய்யும் சம்பாஷணையிலும் இன்பமிருக்காது. நாம சம அந்தஸ்துடன் பேசமுடியாது. நமது இயல்பான சம்பாஷணையை அவர்கள் ஸ்தானத்திற்குரிய மரியாதை மறைத்துவிடுகிறது அவர்கள் எப்பொழுதும் உபதேசத் தோரணையில் தான் பேசுகிருர்கள. ஆகவே இரு தரப்பிலும் பேச்சு ரஸமற்றதாகிவிடுகிறது.

ஒருவரையொருவர் நன்கறிந்த இரண்டு சிநேகிதர்களின் சம்பாஷணையில் தான் உண்மையான இன்பத்தைக் காணலாம். அவர்கள் தங்கள் அபிப்பிராயங்களைத் தாராளமாய் வெளியிடுகிருர்கள். சம்பாஷணை இயல்பாக நடைபெறுகிறது. ஒருவர் பேச்சு மற்றவருக்குத் தெவிட்டுவதில்லை. இருவரும் இன்பமடைகிருர்கள்.

## காதலன் — காதலி கார்ச் சவாரி

## கடத்திச்சென்ற வாலிபன்மீது வழக்கு

## இருமுறை றெயில் அகப்படவில்லை

மாத்தளை ஜூன் 9

விட்டிலிருந்து வெளியேறிய ஒரு யுவனும் ஒரு யுவதியும், கண்டி றெயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று அங்கு றெயில் கிடைக்காமல், அங்கிருந்து கம்பளைக்குச் சென்று அங்கேயும் றெயில் கிடைக்காமல் கடைசியாக மறுநாள் காலையில் பதுளைக்கு மோட்டாரில் வந்து சேர்ந்ததாக, ஒரு கார் டிரைவர் இன்று மாத்தளைப் பொலிஸ்கோர்ட்டில் சாக்ஷியம் கூறினுன்.

கூம்பியாங்கொடையைச் சேர்ந்த காலமன் ஹென்ரி தீஸநாயகா அல்லது ஸோனி என்பவர் கோட்டுவகேதரையைச் சேர்ந்த நந்தரேட்சிகோ என்னும் மங்கையைக் கடத்திச் சென்றதாக வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது.

டிக்கிரி அப்பு என்ற கார்டிரைவர், சென்ற மே மாதம் 19ம் திகதியன்றிரவு சுமார் 10-மணிக்கு எதிரி தன்னிடம் வந்து கண்டிக்குப் போகக் கார் வேண்டுமென்று சொன்னதாகவும், அன்றிரவு 12-30 மணிக்குக் கோட்டுவ கேதரைக்குத் தனது காரைக் கொண்டுபோக, எதிரியும் அம் மங்கையும் அதில் ஏறிக்கொண்டதாகவும், முதலில் காரைக் கண்டிக்குச் செலுத்தியதாகவும் அந்த அன்றிரவு பதுளைக்குப்போகும் றெயில் வண்டி தவறிவிட்டதாகவும், அதன்மேல் எதிரியின் வேண்டுகோளுக்கிணங்க, தான் கம்பளைக்குக் காரைச் செலுத்தியதாகவும் அங்கும் றெயில் தவறிவிட்டதால் மறுநாள் காலையில் பதுளையில் அவ்விருவரையும் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டுத் தான் மாத்தளைக்குப் போனதாகவும் கூறினுன்:

எதிரியின் மூத்த சகோதரியான ஸ்ரீமதி அளவத்கோடை சாட்சியாக விசாரிக்கப்பட்டபோது, சென்ற மே மாதம் 20ம் திகதி எதிரியும் மேற்படி யுவதியும் தன் விட்டுக்குக் காலை சுமார் 9—45மணிக்கு வந்து சேர்ந்ததாகவும், தாங்கள் இருவரும் அனுராசபுரத்துக்குச் செல்வதாகவும், வழியில் தன்னைப் பார்த்துப்போக வந்ததாகவும். எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில், பொலிஸார் விட்டுக்குள் வந்து எதிரியையும் யுவதியையும் கொண்டுபோனதாகவும் கூறினுள்.

நந்தரேட்சிகோ என்றயுவதி விசாரிக்கப்பட்டபோது தான் உளப்பனையில் தனது தாயாரோடும். மாற்றந் தந்தையோடும் வசித்து வந்ததாகவும் தன் தாய் தன்னைப் பிரம்பாலடித்துத் துன்புறுத்தியதுமன்றித் தன்னைக் கடிந்து பேசியதாகவும், அதனுல் தனது வாழ்க்கையே மிகவும் துக்கம் நிறைந்ததாகி விட்டதாகவும்; அதனுற் தான் எதிரியுடன் சென்றதாகவும் கூறினுள்.

யுவதியின் தாயாகிய ஸ்ரீமதி பெரோரா என்பவள் அடுத்தாற்போல் விசாரிக்கப்பட்டாள். அப்போது அவள் தனது குமாரியைத் தான் பிரம்பால் அடிக்கவில்லையென்றும், கையால் ஒரு தடவை அடித்ததுண்டென்றும் எதிரி தனது குமாரியை எப்படியோ மயக்கிக் கடத்திக் கொண்டுபோய் விட்டதாகவும் கூறினுள்.

பதுளைப் பொலிசைச் சேர்ந்த கான்ஸ்டபிள் ஜமால்தீன், பிரஸ்தாபக் காதலர் ஜோடியைக் கைது செய்த விபரத்தைத் தெரிவித்தார்.

யுவதியைப் பரிசோதனை செய்த பதுளை டிஸ்திறிக் வைத்திய அதிகாரியின் வாக்குமூலத்தைப் பதிவு செய்யுமாறு பதுளை நீதவானுக்குக் கமிஷன் பிறப்பிக்கப்பட்டது.

லிட்டில்ஸ் ஓரியண்டல்பாம்.
எல்லா வலிப்புகளுக்கும் நோவுகளுக்கும்
பாரதநாட்டின்
முதன்மையானதும் சிறந்ததுமான
திவ்விய ஔஷதம்.
மிருகக் கொழுப்பு
கலக்கப்படவில்லை என்பதற்கு
உத்தரவாதம்.
Y 44 1-1—31-12-36)

சிவன் வேப்புத் தைலம்.
செம்மேகம், கருமேகப் பத்தக்கள், குஷ்டம், குறைநோய், அரிப்பு, சடிப்பு, சிரந்தி, கரப்பான் புண்களும்; விஷ கடிகள் மேகஊறல், சுக்கூன்பதக்கள், சொறி சிரங்குகள்; கை கால் வலி, குடைச்சல் பிடிப்புவலி முதலிய குலை ரோகங்கள்; அண்டவாதம், கண்டமாலை, அரையாப்பு, பௌத்திரம், விரைப்புற்று ரணங்களும் ஆச்சரியமாய் குணமாகின்றன. ஊறல், பதது, ரணங்களுக்கு இதை மேலுக்கும் பூசலாம்.
12நாள் புட்டி விலை ரூபா 2. 3 புட்டிவரை தபால் செலவு சதம் 75.
நீராதெனக் கைவிடப்பட்ட கொடிய ரோகங்களெல்லாம் இதுவரை ஆயிரக்கணக்கில் குணமாகிவிட்டன.
தாளக பஸ்பம்.
இருமல், இளைப்பு, கஷ்டசுவாசம், கபக்கட்டு, கோழை, சுரம், உடம்பு அளலாயிருதல், ஆகிய கோளாறுகளையும், மூக்கில் நீர்வடிதல், ரத்தம், சொய் விழுதல், மூக்கடைப்பு, வாயில் நீருலல், இனிப்புத் தோன்றல், மலி மந்தம், ஆகிய பீனிசக் கோளாறுகளையும் கண்டிப்பாய்க் குணம்செய்கிறது.
இருமல், இளைப்பு சுகம்.
என்னைப் பத்துவருஷமாய்த் துன்பப்படுத்திய இரத்தகாசம், கபத்துடன் இரத்தம் விழுதல், தர்காறறம், நான்குவருஷ இருமல் எல்லாம் தங்கள் "தாளக பஸ்பம்" சாப்பிட்டதில் இன்றுடன் 8 நாளில் கடவுள்கிருபையால் நல்ல சுகம்.
(Sd.) அ. செ. செய்யது இப்ராஹிம், திருக்கோணமலை.
தாளக பஸ்பம், அநுபானம், தாளிசபத்திரி சூரணம் உள்பட
20 நாள் மருந்து ரூபா 12-50.
குறிப்பு:— வெளிநாட்டார் ரூபா 5 அட்வான்ஸ் அனுப்பவும்.
தண்டபாணி வைத்தியசாலை, பழனி.
(Q 19. 27-4 to 26-7-36) தி (PALNI, S. I.)

# மகனது மத மாற்றம் பற்றிக் காந்திஜீ கவலை

## சகோதரர் சங்கம் காந்திஜீக்கு அனுப்பிய தந்தி

### " இஃதெல்லாம் எனக்கு மனநோவை உண்டுபண்ணிற்றென்பதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்"

பெங்களூர் ஜூன் 6—

காந்திஜீயின் மூத்த புதல்வரான ஸ்ரீ ஹிராலால் இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டதன் சம்பந்தமாக காந்திஜீ "என்னுடைய எண்ணிறந்த நண்பர்களுக்கு" என்னும் தலைப்பின் கீழ் முஸ்லீம்களுக்கு ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார்:—

சுமார் 15 தினங்களுக்கு முன்னர் எனது மூத்த குமாரன் ஸ்ரீ ஹிராலால் (வயது 50) இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டதாகவும், சென்ற வெள்ளிக்கிழமை (இம் மீ 29க் தேதி யன்று) பம்பாய் ஜும்ஆ மஸ்ஜிதில் கூடிய பிரம்மாண்டமான கூட்டத்தில் அவன் தான் இஸ்லாத்தில் சேர்ந்து விட்டதை அறிவிக்க அனுமதிக்கப் பட்டதாகவும், அப்பொழுது மிகுந்த உற்சாகம் காணப்பட்டதாகவும், அவன் பிரசங்கஞ் செய்து முடித்த பின்னர் முஸ்லீம் நண்பர்கள் அவனுடன் கைகுலுக்க நெருங்கிப் போட்டி போட்டுக் கொண்டு சென்றதாகவும் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன. அவன் வேறு உலக காரணங்களுக்காகவல்லாமல், மனப் பூர்வமாக இஸ்லாத்தில் பற்றுக் கொண்டு மதம் மாறியிருக்கும் பக்ஷத்தில் எனக்கு ஒரு சிறிதும் ஆக்ஷேபமில்லை. ஏனெனில், என் மதத்தைப் போலவே இஸ்லாம் மதமும் பரிசுத்தமானது என்று நான் நம்புகிறேன்.

### ஹிருதய பூர்வமாகவன்று

ஆனால், அவன் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருப்பது ஹிருதய பூர்வமாக, அல்லது உலக இச்சைகளை விட்டுப் பரிசுத்தம் அடைந்திருப்பதற்காகவா என்னும் விஷயத்தில் எனக்கு ஆழமான சந்தேகம் உண்டு. என் மகன் ஹிராலாலை அறிந்திருக்கும் ஒவ்வொருவரும், அவன் அநேக ஆண்டுகளாகவே மதுபானப் பழக்கம் உள்ளவன் என்பதையும், விபசார தோஷம் நிறைந்தவனென்பதையும் நன்கறிந்திருப்பர். சில ஆண்டுகளாக அவன் தனக்குத்தாராளமாக அளிக்கப்பட்டு வரும் நண்பர்களின் தருமத் தொகையைக் கொண்டே ஜீவித்து வருகிறான். அவன் சில பட்டாணியர்களிடமிருந்து அதிகமான வட்டிக்குக் கடன் வாங்கி அவதிப்படுகிறான். சமீப காலம் வரை பம்பாயிலுள்ள தனக்குக் கடன் கொடுத்த பட்டாணியர்களிடமிருந்து உயிருக்கே அபாயம் வந்து விடுமென்று அஞ்சிக் கொண்டிருந்தான்.

இப்பொழுதோ அவன் அந்த நகரத்தில் ஒரு பெரிய வீரனாக விளங்கி வருகிறான். அவனுடைய மனைவி தன் புருஷனிடத்து அளவிறந்த பக்தி விசுவாச முள்ளவளாயிருந்தாள். அவனுடைய குற்றங் குறைகளை யெல்லாம் — சோரத்தனம் உட்பட அம்மாது மன்னித்தே வந்தாள். அவனுக்கு இரண்டு குமாரிகளும் ஒரு குமாரனுமாக வயது வந்த மூன்று குழந்தைகள் உண்டு. இவர்களை அவன் நெடுங் காலமாகவே பராமரிக்காது விட்டான்.

### பணத்திற்காக மதமாற்றம்

சில வாரங்களுக்குமுன் அவன் ஹிந்துக்களை — ஹிந்து மதத்தை பன்று பணமாரக குறை கூறி கிறிஸ்து மதம் அல்லது இஸ்லாம் மதத்தைத் தழுவிக் கொள்ளப் போவதாகப் பயமுறுத்திப் பத்திரிகைகளில் பிரகடனப் படுத்தினான். அந்தக் கடிதத்தின் வாசகத்தைப் பார்த்தால், அதிகமான தொகை கொடுப்பவரது மதத்தையே அவன் தழுவிக் கொள்வானென்னும் விஷயம் மிக விளக்கமாகக் காணப் பட்டது. அந்தக் கடிதம் அவன் விரும்பிய பயனையே அளித்தது. ஒரு ஹிந்து நவுன்சிலாது கல்லுதவியால் நாகபுரி நகரசபையில் அவனுக்கு ஒரு வேலை கிடைத்தது. அப்பால் அவன் பத்திரிகைகளுக்கு மற்றொரு கடிதத்தை வாபஸ் வாங்கிக் கொண்டதாகவும், தன்னுடைய முன்னோர்களின் மதத்தில் இருப்பதைக் குறித்த வன்மையாக ஆசிப்பதாகவும் பிரசுரித்திருந்தான்.

### தந்தை தாயிடம் கூறியவை

நான் சென்றவைகாசில நாகபுரியில் இருந்தபொழுது அவன் என்னையும் தன் தாயையும் பார்க்க வந்தான். அப்பொழுது அவன் கூறியதாவது: —போட்டி மதங்களின் பிரசாரகர்கள் தன்னைவந்து என்னென்ன விதமாக வெல்லாம் போட்டி கண்டு வந்தார்களென்றும், அதைக் கண்டு அவன் எவ்வாறு குதூகல மடைந்தானென்றும் கூறினன். நாகபுரியில் எங்களைச் சந்தித்தபோது அவன் காட்டிய மன இரக்கத்தையும், தன் பழைய வாழ்க்கைக்காக வருந்தித் தனது குடிப் பழக்கத்தையும் உதறித் தள்ளிச் சட்டென ஒரு பரிசுத்த மனிதனாக மாறிவிட்டதாக அந்த வெள்ளிக்கிழமையன்று தெரிவித்துக் கொண்டான்.

ஆனால் இப்பொழுது பத்திரிகைகளில் வெளியாயிருப்பவை அதற்கு விரோதமாக இருக்கிறது. அவன் இன்னமும் திடுக்கிடக்கூடிய செய்கைகளிலும், சுகபோக வாழ்க்கையிலும் ஆனந்தம் கொண்டிருப்பவனாகக் காணப்படுகின்றான். அவன் தன் நிலைமையில் மாறு பட்டிருந்தால் என் மனதுக்குச் சந்தோஷமளிக்கு முறையில் எனக்கு அவன் எழுதியிருப்பான்.

### மகனுள்பட ஒருவரிடமும் சொல்லவில்லை

என் குழந்தைகளுக் கெல்லாம் எண்ணத்திலும் செய்கையிலும் பான அளவிறந்த சுயேச்சை அளித்திருக்கிறேன். அவர்கள் தங்கள் மதத்தின் மாட்டுக் காண்பிக்கும் அதேவித மரியாதையையே எல்லா மதங்கள் மாட்டும் காண்பிக்கவேண்டும் என்று அவர்கள் கற்பிக்கப்பட்டிருக்கிறார்கள். ஹிராலால் சரியான உயிர் வாழ்க்கைக்கும் சாந்திக்குமுரிய திறவுகோல் இஸ்லாத்தில் இருக்கிறதென்பதைக் கண்டுபிடித்து விட்டதாக எனக்குச் சொல்லியிருந்தால் யான் அவனுக்குத் தடையாக விருந்திருக்கவே மாட்டேன். ஆனால், இப்பொழுது என்னுடன் வசிக்கும் அவனுடைய 24 வயதுக் குமாரன் உட்பட நங்கள் எல்லோரும் பத்திரிகைகள் வாயிலாக வெளியான செய்திகளிலிருந்தே அவன் மதமாறியதை அறிந்து கொண்டோம்.

என் குமாரன் இஸ்லாத்தைத் தழுவியது குறித்து அளவிறந்த குதூகலம் காட்டி வரும் இஸ்லாத்தின சகோதர சங்கமொன்று எனக்குப் பின்வருமாறு தந்தியொன்றை அனுப்பியிருக்கிறது.

"உமது குமாரனைப் போல உண்மையை நாடும் நீரும் உலகத்தின மகா உண்மையுள்ள மதமாகிய இஸ்லாத்தைத் தழுவ வேண்டுமென்று எதிர் பார்க்கிறோம்."

இஃதெல்லாம் எனக்கு மனநோவை உண்டு பண்ணிற்றென்பதை யான் ஒத்துக் கொள்ளத் தான் வேண்டும். இத்தகைய படாடோபத்தின் பின்னே மதத்தின் உண்மையான நல்லெண்ணம் இருப்பதாக நான் அறிந்து கொள்ளவில்லை.

### முஸ்லிம்களுக்கு ஒரு வேண்டுகோள்.

ஹிராலால் ஹிந்து மதத்தைத் துறந்து விட்டதால், இம் மதத்திற்கு நஷ்டமொன்றும் விளைந்துவிடவில்லை; அவன் இதற்கு முன்வரை இருந்து வந்ததே போன்று இன்னமும் இருந்து வருவானாயின் அவன் இஸ்லாத்தில் சேர்ந்து கொண்டதால் அம்மதத்திற்கே ஒரு பலஹீனந் தான் விளையக் கூடும். ஹிருதய சுத்தமில்லாமல் மதமாற்றம் கொள்வதென்பது, கடவுளையும் மதத்தையுமே மறுப்பதாகும். ஹிருதய சுத்தம் இல்லாத மதமாற்றம், துக்கத்தையே தரும்.

மேற்கூறிய சில வரிகளை என் எண்ணிறந்த முஸ்லிம் நண்பர்களுக்கு யான் விடுப்பதன் நோக்கம் இதுவாகும். அவன்பால் உண்மையான தன்மையென்பது இருக்கிறதாக அவர்கள் கண்டுபிடிப்பார்களாயின், அவனை உலக மாயையுள் இனியும் வீழ்ந்து விடாமல் தடுத்து ஆதரிக்கல் வேண்டும். இவ்வாறு செய்தால் அவனது உண்மையான தன்மையானது அவனைத் தெய்வமயமுள்ள ஒரு சமூக அங்கத்தினனாக உயர்த்தி விடக்கூடும். அளவிறந்த இச்சா போகங்களுள் மூழ்கிக் கிடந்ததால், அவனது மூளை பலஹீனமடைந்து, நன்மை இன்னது தீமை இன்னது, மெய் இன்னது பொய் இன்னது என்று குறைபாடு செய்தற்குரிய சக்தியும் குறைவாகி விட்டதென்பதை அம் முஸ்லிம் நண்பர்கள் அறிந்து கொள்ளக் கடவார்கள். (தா—இ)

# குழந்தையோடு விளையாடிய நாகபாம்பு

### அது கடிக்கவுமில்லை; அதனை ஒருவரும் அடிக்கவுமில்லை;

சென்றசியாழக்கிழமை (11-6-3 ) அளிசாவளையைச் சேர்ந்த தல்துவா என்னும் கிராமத்திலே ஒரு பெண் தன் குழந்தையுடன் குளிக்கும்படி தெருவோரத்திலுள்ள ஒரு குளத்தண்டை போய் குழந்தையை அப்பு நீருள்ள கரையில் நிற்கவிட்டுத் தான் துணியலம்பிக்கொண்டு நின்றாள். சடுதியில் தண்ணீரில் அடிப்பது போன்ற ஒரு சத்தங் கேட்கவே தாய் தன் குழந்தையைத் திரும்பிப் பார்த்தாள் என்ன ஆச்சரியம்! ஒரு நாகபாம்பு தன் குழந்தையைச் சுற்றுவதைக் கண்டு ஏங்கினள்; பதைபதைப்பொடு தாய் குழந்தைக்குக் கிட்டப்போகவே, பாம்பு குழந்தையை விட்டு இறங்கி வந்து தாயின் காலைச் சுற்றிக்கொள்ள அவள் அச்சத்தினால் ஏதும் பேச நா எழாமல் இடர்ப்பட அதனைக்கண்டு அங்கு நின்றோர் ஓடிவந்து பாம்பை வெருட்டி அவள் காலை விடச் செய்தனர். பாம்பு மெல்லப்போய் ஒரு மரத்தில் ஏறிக்கொண்டது. அதன் நீளம் 6 அடிவரையிலிருக்குமாம். அது ஒருவரைக் கடிக்கவுமில்லை; அதனை ஒருவர் அடிக்கவுமில்லை

# மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை குருபூசை

நிகழும் தாதுவருடம் வைகாசி மாதம் உசம் திகதி சனிக்கிழமை மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் குருபூசை நடத்தப்பட்டது. அத்தருணம பண்டிதர் பொன்னம்பலபிள்ளை அவர்கள் நாயனருடைய சரித்தத்தையும் அவருடைய பெருமையையும் அவரது அற்புதச் செயல்களையும் எடுத்துக் கேட்டோர் யாவரும் இன்புறுமாறு கூறினர். நாயனார் மூவாண்டில் அம்மையப்பரை நினைத்து முதன் முதல் பாடிய தேவாரத்தத்தவார்த்தத்தை எடுத்து யாவருக்கும் தெள்ளிதினுணர்த்தினர். இடையிடையே அவர் பாடிய தேவாரங்களையும் பெரியபுராணத்து விசேட செய்யுட்களையும் எடுத்துக் கூறினர். இதன்பின்னர், ஷெ வித்தியாசாலைத் தலைமையாசிரியர் பண்டிதர் சா. பொ. இரத்தினம் அவர்கள் குறிப்புரை கூறினர். பூசை முடிவில் யாவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

# அடுத்தயுத்தத்தில் இந்தியா உதவிபுரியக்கூடாது?

## ஐக்கிய மண்டல மாகாண மகாநாட்டில் பண்டித ஜவகர்லால் நேரு கூறிய காரணங்கள்.

லக்னோ ஜூன் 8—

ஐக்கிய மண்டல மாகாண மகாநாடு இன்று ஜனாப் ராபி அகமது கித்வாயின் தலைமையில் கூடியது. விஷயாலோசனைக்கமிட்டிக் கூட்டத்தில், அடுத்த யுத்தம் சம்பந்தமாக பண்டித ஜவஹர்லால் கீழ்க்கண்ட தீர்மானம் கொண்டுவந்தார். கூட்டத்தில் ஏராளமான மெம்பர்களும் விசிட்டர்களும் சமூகமாயிருந்தனர்.

லட்சுமணபுரியில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸ், யுத்த ஆபத்துச் சம்பந்தமாக நிறைவேற்றிய தீர்மானத்தை இம் மாகாண வாசிகள் முக்கியமாகக் கவனிக்கவேண்டும். பின்பு சென்ற 2 மாதத்திற்குள்ளேயே சர்வதேச நிலைமை வரவர மோசமாகி உலக யுத்தத்தை மிகவும் சமீபத்தில் கொண்டுவந்து விட்டது.

அபிசீனியாவில் ஏகாதிபத்திய பாஸிஸ்ட் படையெடுப்புவெற்றிபெற்று விட்டது. சர்வதேச சங்கத்தின் கூட்டுப் பாதுகாப்பு முறை பாழாகி, ஏகாதிபத்தியமான மற்ற மிருக பலமே ஜெயமடைந்ததென்பது தெரிந்து விட்டது. ஜெர்மனி பாஸிஸ்ட் இயக்கத்திற்கு பிரிட்டிஷ்சர்க்காரின் ஆதரவு கிடைத்திருக்கிறது. ஜெர்மனி யுத்தத்திற்குத் தயாராக இருப்பது வெட்ட வெளிச்சம்; கிழக்கே ஜப்பான் ஏகாதிபத்தியம் அடக்குமுறைக்கொள்கையை விடாது அனுஷ்டித்து வருகிறது; ஏகாதிபத்திய வல்லரசுகளுள் தினே தினே போட்டியும், பொறாமையும் வளர்ந்து வருகின்றன. எனவே ஏகாதிபத்திய உலக யுத்த ஆபத்து உடனே ஏற்பட்டுவிடும்போல இருக்கிறது. காங்கிரஸின் எச்சரிக்கையை இம்மகாநாடு வற்புறுத்தி, அவ்வித ஏகாதிபத்திய யுத்தம் வந்தால், இந்தியா அதில் எவ்விதமும் கலந்துகொள்ளக் கூடாதென்றும், அதற்கு எவ்வித உதவியும் செய்யக்கூடாதென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

### விசாரப்படுவானேன்?

மேற்படி தீர்மானத்தை பிரேரேபித்து பண்டித ஜவஹர்லால் நேரு பேசியதாவது:—

இந்தியர்களுக்கு தங்கள் சொந்த கஷ்ட நிஷ்டூரங்கள் எவ்வளவோ இருந்து வருகையில், ஐரோப்பாவில் ஏற்படக்கூடிய யுத்தத்தைப்பற்றி விசாரப்படுவானேனென்று சிலர் கருதலாம். இவ்வித அபிப்பிராயம் இக்காலத்திற்குச் செல்லாது அந்த காலமலையேறிவிட்டது. இக்காலத்தில் ஒரு தேசத்தில் யுத்தமேற்பட்டாலும் அது எல்லாத் தேசங்களையும் பாதிக்கும். எனவே உலக யுத்தமாக இருக்கும். ஐரோப்பாவில் யுத்தமேற்பட்டால் இந்தியாவுக்கு எவ்வித கஷ்டமுமேற்படாதென்று மற்றோர் சாரார் கருதுகின்றனர். ஆனால் அந்தச்சமயத்தில் என்ன ஏற்படுமென்பதைப் பற்றி நிச்சயமாக ஒன்றும் சொல்லுவதற்கில்லை. இந்தியாவுக்கு அதனால் லாபமாகவும் இருக்கலாம். கஷ்டமேற்பட்டாலும் ஏற்படலாம்.

ஸ்ரீபுருஷோத்தமதாஸ் தாண்டன் முதலியவர்கள் பேசிய பின்பு தீர்மானம் நிறைவேறியது.

# அடுத்த காங்கிரஸ் கூட்டம் கிராமத்திலா?

## காந்திஜீ எழுதியுள்ள கடிதம்

புனா, ஜூன் 10—

அடுத்த காங்கிரஸ் எங்குநடத்துவதென்பது பற்றி மஹாராஷ்டிர மாகாணக் காங்கிரஸ் கமிட்டியினர் ஆலோசித்து வருகிறார்கள். இன்னும் இது சம்பந்தமாக ஒரு முடிவும் செய்யப் படவில்லை. கிழ்காண்டேஷ் ஜில்லாவில் உள்ள பெய்ஸ்பூர் என்ற ஊருக்கருகில் இருக்கும் கிரோதா என்ற கிராமத்தில் நடத்துவதா ஜாலகான் என்ற பட்டணத்தில் நடத்துவதா என்ற விஷயமாக இப்போது முக்கியமாக ஆலோசனை நடந்து வருகிறது. மகாத்மா காந்தி கிரோதா கிராமத்தில் நடத்துவதே சரியென யோசனை கூறியிருக்கிறார். மஹாராஷ்டிரத்திலுள்ள பிரபல காங்கிரஸ் வாதிகள் ஜாலகான் பட்டணத்தில் நடத்தினால் தான் நன்மையென அபிப்பிராயப்படுகின்றனர். இது சம்பந்தமாக ஆலோசித்து முடிவு செய்ய ஏற்பட்ட கமிட்டியில் ஸ்ரீமான் எஸ். டி. தேவ், ஸ்ரீமான் கட்ஜில், ஸ்ரீமான் ஜாதே முதலியவரிருக்கின்றனர்.

மகாத்மா கிராமத்தில் காங்கிரஸை நடத்தினாலும் அங்கும் ஒரு புதிய பட்டணத்தை ஏற்படுத்தி விடுவதில் பயனில்லையென்றும் ஒரு தகுதியான கிராமம் ஆயிரக்கணக்கில் கூடும் காங்கிரஸ் வாதிகளுக்குத் தன்னாலான வசதியைக் குறைவற அளித்து வழிகாட்டினால் போதுமென்றும் கிரோதா என்ற கிராமம் இந்தியாவின் சிறந்ததொரு கிராமம் எவ்வித மிருக்குமென்பதை டிசம்பரில் காட்டிவிட வேண்டுமென்றும், கிராமம் சரியான கிராமமாக விருந்தால் அங்கு வருபவர்களுக்கு அது சுகாதாரம், உணவு, முதலிய எல்லா விஷயங்களிலும் தகுதியான வசதி அளிக்கக்கூடிய நிலையில் இருக்கவேண்டு மென்றும் இங்கு நடை பெறும் காரியங்கள் கிராமவாசிகளுக்கு மட்டுமின்றி நகரவாசிகளுக்கும் ஒரு படிப்பினையாக விருக்கவேண்டு மென்றும், காங்கிரஸில் பொருட்காட்சி ஒரு முக்கிய அம்சமாகவிருக்குவேண்டு மென்றும் இஞ்சினீர்கள் முதலியவரும் கிராம முன்னேற்ற உணர்ச்சியுடன் தாங்களாக முன் வந்து இவ்விஷயத்தில் உதவி புரிய வேண்டும் என்றும் அப்போதுதான் லக்ஷ்மணபுரியில் நடந்த பொருட்காட்சியை விட குறைந்தசெலவில் சிறப்புடன் இங்குகாட்சி நடக்குமென்றும் காந்திஜீ தமது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

காந்திஜீ இந்தச்சமயத்தில் சிறந்த கிராமம் என்பது எவ்விதமிருக்க வேண்டுமென்பதைக் காட்டிவிட உத்தேசித்திருப்பதாகத் தெரிகிறது.

# லிண்ட்பெர்க் தாராளம் நண்பருக்கு உதவி.

(ராய்ட்டர்)

டிரெண்டன், ஜூன் 9

தன் குழந்தையை மீட்பதற்கென்று கர்னல் லிண்ட்பெர்க் ஹாட்மனிடம் கொடுத்த பணத்தில் 14860 டாலரைப் பொலீசார் கைப்பற்றினர்கள். அதைத்தமது நண்பரும் வக்கீலுமான கர்னல் லிண்ட்பெர்க் அதிகாரிகளுக்கு எழுதியிருக்கிறார்.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாம் அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: தாதுஸ
ஆனி மீ உ௨ திங்கட்கிழமை

## பயனற்ற கல்வி

### I

சென்றவாரம் கொழும்பிலுள்ள அரசினர் கல்லூரியிற் பரிசளிப்புக் கூட்டம் நடைபெற்றபோது, தலைமை வகித்த தேசாதிபதியவர்கள் இலங்கையில் ஊட்டப்படுங் கல்விவிஷயமாகச் சில சொல்லியவிடத்து, இந்நாட்டில் இப்பொழுது ஊட்டப்பட்டு வருங் கல்வி பயனற்றதென்றும் அந்நிய நாடுகளிலுள்ள சர்வகலாசங்கக் கட்டுரிய பரீட்சைகள் இங்குள்ள மாணவர்க்கு ஏற்றனவல்லவென்றும் இலங்கைக்கென ஒரு சர்வகலாசங்கம் அவசியகம் தாபிக்கப்படல் வேண்டுமென்றும் பொருள் அமையக் கூறியுள்ளார்.

இலங்கையிலுள்ளார்க்கு ஊட்டப்படும் பாஷைகள் தமிழ் சிங்களம் ஆங்கிலமென்னும் மூன்றுமாகும். இவைகளுட் சுதேச மொழிகளாகிய தமிழையேனும் சிங்களத்தையேனும் விருத்திபண்ணுதல் வேண்டுமென்ற நோக்கம் அதிகாரிகளிடத்தில் எள்ளளவும் இல்லையென்னலாம். தமிழ்மொழி ஆங்கிலர் பரிபாலனத்திற்கு முன் இந்நாட்டில் மிகவும் உன்னத நிலைமையிலிருந்தது புராதனமானதும் பூரணமானதுமாகிய தமிழ்மொழியை நமது அரசினர் மிகவும் ஈனமான நிலைமையிற் கொண்டுவந்து விடுத்ததோடுமாத்திரம் நின்றுவிடாது பூரணமாக ஆங்கிலக் கல்வியை இன்னமும் ஊட்ட நினைத்தாரல்லர். இலங்கை முழுவதையும் பிருத்தானியர் கைப்பற்றி 116 வருடங்களாகின்றன; அதாவது ஏறக்குறைய 5 சந்ததிகளின் காலமாகின்றது இப்படியிருந்தும் இன்னமும் இலங்கைக்கென ஒரு சர்வகலாசங்கத்தைத் தாபித்து, அந்தச் சங்கவாயிலாக இங்குள்ள மூன்று பாஷைகளையும் இன்னும் சம்ஸ்கிருதம் பாளியென்னும் மொழிகளையும் இந்நாட்டிற் பயிற்ற வேண்டுமென்ற எண்ணங் கொண்டாருமல்லர். கல்வியூட்டும் விஷயத்தில் மாத்திரம் சீர்திருத்தமான முறை கைக்கொள்ளப்படவில்லை; ஏனைய பரிபாலன முறைகளிலும் வரிவிதிக்கும் முறைகளிலும் இங்கிலாந்திற்கு அடுக்க எங்கள் இலங்கை நிற்கின்றதென்று சொல்லுகிறார்கள். இங்குள்ள டோனமூர்ப் பரிபாலனமுறை, கற்றார் மற்றார் ஆண்கள் பெண்கள் எல்லாருஞ் சம்மதஞ்சொல்லும்முறை, பெண்கள் அரசாங்கசபையில் அங்கத்துவம் வகிக்கும்முறை, மதுபரிபாலனமுறை, வருமானவரி முறை இவைகளெல்லாவற்றிலும் இலங்கையே சிறந்ததாகும். ஆனாற் கல்வியூட்டும் விஷயத்திலெனிலோ பிலிப்பயின்தீவு முதலிய நாடுகள் இந்த இலங்கையைக் காட்டிலும் பதின்மடங்குவிசேஷமென்னலாகும்.

டோனமூர்ப் பரிபாலன முறை வந்தபின்னுயினும், இக் கல்வி விஷயத்திலே ஏதும் திருத்தமுண்டாகும், பயன்விளையும், ஒரு சர்வகலாசங்கமேனும் ஏற்படல்கூடுமென இங்குள்ளார் காத்திருந்தனர், எதிர்பார்த்திருந்தனர்; ஆனால் இற்றைவரையில் ஏதும் நடந்ததுமில்லை, நடக்குமென நாம் நம்பத்தக்க ஏதுவுமில்லையெனலாம். வித்தியாபகுதியாரைவிட வித்தியா பரிபாலனத்திற்கென ஒரு மந்திரியும் இப்பொழுது இருக்கின்றாரல்லவா? கல்வியின்பொருட்டு இவர் இற்றைவரையிற் செய்த முயற்சியென்ன. நமது நாட்டிலே "ஆண்டிகள் கூடி மடங்கட்டுவதுபோல" என்று ஒரு பழமொழியுண்டு. அதே விதமாக இடையிடையே அரசாங்கசபைக் கூட்டங் கூடும்போது இலங்கையிற் சர்வகலாசங்கமொன்று தாபிக்கத்தான்வேண்டும், அப்படித் தாபிப்பது கொழும்பிலா, கண்டியிலா, டயத்தலாவையிலா என்று பேசிக்கொள்வதேயல்லாமல் செயலளவில் ஒன்றையும் இன்னமுங் காணோமே. இந்த அதிகாரவர்க்கத்தினர் கல்வி விஷயத்தில் இலங்கை மக்களை இன்னமும் எவ்வளவு காலத்திற்கு ஏமாற்ற நினைத்திருக்கிறார்களென்பது தெரியவில்லையே.

தமிழ் சிங்கள மொழிகளின் விருத்தியை வித்தியாபகுதியார் கெடுக்க அந்நியநாட்டுச் சர்வகலாசங்கப் பரீட்சைகளுள் கேம்பிரிஜ் பரீட்சைகள் போய்விட, லண்டன் மற்றிக் பரீட்சை யொன்றுதான் இப்பொழுது இங்கே எஞ்சிநிற்கின்றது. இந்த ஆரம்பப்பரீட்சைக்காகிய பள்ளிக்கூட வேதனமும் புத்தகச்செலவும் கட்டணப்பணமும் இங்குள்ள ஏழை மாணவர்க்குச் செலவிட்டுப் படிக்க முடியாத தன்மையிலுள்ளன. இதனால் எத்தனை ஏழைப்பிள்ளைகள் ஆங்கில எட்டாம் வகுப்புக்குச் சமானமான J. S. C. என்னும் வகுப்புவரையிற் படித்துவிட்டு அதன் மேற் படிக்க வகையின்றி நின்று அல்லோல கல்லோலப் படுகிறார்கள்! இதுகாறுமிருந்த கல்விவிருத்தியும் இப்பொழுது இல்லாமற் போய்விட்டதே!

## யாழ்ப்பாணம் நகரசபை

சென்ற செவ்வாய்க் கிழமையன்று இலங்கைத் தேசாதிபதி அவர்கள், யாழ்ப்பாணம் முற்றவெளியிலுள்ள புதிய நகரசபை மண்டபத்தைத் திறந்துவைக்கும்போது கூறிய வார்த்தைகள் யாழ்ப்பாணமக்கள் ஒவ்வொருவராலும் நன்கு சிந்திக்கற்பாலனவாகும். யாழ்ப்பாண நகரைப் பரிபாலிப்பதற்கு ஒரு முனிசிப்பல் கவுன்சில் அமைக்கப்படவேண்டும் என்னும் கிளர்ச்சி நடைபெறும் இச்சமயத்தில் தேசாதிபதி அவர்கள் கூறிய வார்த்தைகள் சாலவும் பொருத்தமுடையனவாக இருத்தல் கருதற்பாலது. முனிசிப்பல் கவுன்சில் ஏற்படுத்தப்படுமாயின், அதனை நிர்வகித்தற்குச் செலவு அதிகமாகும். அன்றியும் தண்ணீர்வசதிகள் யாழ்ப்பாணத்திற் கிடையா என்பனவே, முனிசிப்பல் கவுன்சில் ஏற்படுத்தப்படுதற்கு மாறான கருத்துடையோர் எடுத்துக் காட்டும் நியாயங்களாகும். இவ்விரு நியாயங்களையும் எடுத்துக்காட்டி அவை ஆதாரமற்றவை என்பதைத் தேசாதிபதி அவர்கள் தமது சொற்பொழிவிற் சுட்டிக் காட்டியுள்ளார்கள். முனிசிப்பல் கவுன்சில் ஏற்படின்—அதிலுள்ள அங்கத்தவர்கள் செலவைச் சுருக்கமாக நடத்துவதிற் கண்ணுங் கருத்துமாயிருப்பார்களாயின்—நிர்வாகச்செலவு அதிகமாதற்கு நியாயமில்லை. அங்கத்தவர்களைத் தெரிவு செய்யும் வரியிறுப்போர், டாம்பீகமாகச் செலவை ஏற்படுத்துவோரைத் தவிர்த்து, சிக்கனமான நிர்வாகமுறையை நடத்தும் ஆற்றல்வாய்ந்த அல்லது அதற்காக வாதிக்கின்ற அங்கத்தவரைத் தெரிவுசெய்யின் அக்குறை நிவர்த்தியாகும் என்பதில் ஐயமில்லை. இதனைத் தேசாதிபதி அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார்கள். முனிசிப்பல் கவுன்சில் ஏற்படின், தண்ணீர் வசதியின்மையைப்பற்றியும் கிளர்ச்சி செய்து அக்குறையையும் நிவர்த்தி செய்துகொள்ளலாம் என்றும் அவர் எடுத்துக் காட்டியிருத்தல் கருதற்பாலது. யாழ்ப்பாணம் வடமாகாணத்தின் தலைநகர் மாத்திரமன்று. அது தமிழ்மக்களது தலைநகர் என்று கூறினும் அமையும். அன்றியும் ஜனத்தொகையிலும் விஸ்தீரணத்திலும் அது இலங்கையின் தலைநகராகிய கொழும்புக்கு இரண்டாவதாக உள்ளது. அதன் ஜனத்தொகை 45,000 க்கு அதிகம். முனிசிப்பல் கவுன்சிலை யுடைய கண்டி, காலி முதலிய நகரங்களின் ஜனத்தொகைகள் இத் தொகையிலும் குறைந்தனவேயாகும். யாழ்ப்பாணத்திற் கல்வி யறிவுளோர் தொகையும் அதிகமாகும். யாழ்ப்பாணத்தின் கல்வி யறிவுள்ளோர் விகிதம் கொழும்பிலுள்ள கல்வியறிவுள்ளோர் விகிதத்தைக்காட்டிலும் கூடியதாகும்; ஆகவே, எவ்வாற்றானும் முக்கிய ஸ்தானம் வகிக்கும் யாழ்ப்பாண நகருக்கு முனிசிப்பல் கவுன்சில் அமைக்கப்படுதல் சாலவும் பொருத்தமுடையதே யாகும்.

இப்பொழுதுள்ள பட்டின பரிபாலன சங்கம் தன்னாலானவரை நல்ல தொண்டாற்றி வந்திருக்கின்றது என்பது குறிக்கற்பாலது. ஆயின், அது முனிசிப்பல் கவுன்சிலாக மாற்றப்படின், அதனால் விளையக்கூடிய பலன்களோ பலவாகும். சென்ற 25 ஆண்டுகளுக்குள் யாழ்ப்பாணத்திலிருந்து வரிகளின் மூலம்பெறப்படும்வருமானம் 25,000 ரூபாவிலிருந்து 3 லக்ஷம் ரூபாவாக அதிகரித்திருக்கிறது. காலியில் முனிசிப்பல் கவுன்சில் ஏற்படுத்தப்படும்போது அங்கு வரிகள் மூலம் பெறப்பட்ட வருமானம் இதினும் எவ்வளவோ குறைந்திருந்ததென அறியக்கிடக்கின்றது.

எனவே, எல்லாப்படியாலும் யாழ்ப்பாணத்திற்கு ஒரு முனிசிப்பல் கவுன்சில் ஏற்படுவதே தக்கது என்பது தேசாதிபதி முதற் பல அறிஞர்கள்வரை பலரும் கொண்டுள்ள கருத்தாகும். இதற்கு மாறான கருத்து உள்ளோரது நியாயங்களும் அச்சங்களும் போதிய ஆதார முடையனவாகக் காணப்படவில்லை.

## மதிப்புரை.

### "நாவலன்"

நாவலன் எனப் பெயரிய வெளியீடு நமது பார்வைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இது யாழ்ப்பாணம் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை மாணவர் சங்கத்தாரால் வெளியிடப் பட்டதாகும். இஃது அணிமிக உடையதாய் மணி போன்ற அரிய விஷயங்களைக் கொண்டு விளங்குகின்றது. இதன் அளவும் அமைப்பும் இதிலுள்ள கட்டுரைகளும் எவரையும் வசீகரிக்கத்தக்கன. இதுவரை தமிழில் எந்தக் கலாசாலையைச் சேர்ந்த மாணவர் சங்கமேனும் இத்தகைய சிறந்தமுறையில் ஒருபத்திரிகையை வெளியிட்டது கிடையாதென்றே நாம் கூறுவோம். "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்னும் மகுடமொழி முதற்கண் மிளிர்கின்றது. நாவலர் பெருமான் இயற்றிய "சீர்பூத்தகருவி நாலுணர்ச்சி தேங்க" என்றற் றொடக்கத்துத் தோத்திரப்பா இவ் வெளியீட்டின் குறிக்கோள் இன்னது என்பதைத் தெள்ளிதிற் காட்டி நிற்கின்றது. பத்திராசிரியரது கூற்றாக எழுதப்பெற்றுள்ள "நாம்" என்னும் விஷயம் படிப்போர் மனதிற் பசுமரத்தாணிபோற் பதிந்து அவர்தம்மை உணரவைக்கும் ஆற்றல் நிறைந்ததாக, உண்மை உணர்ச்சியோடு பொறிக்கப்பெற்றிருக்கின்றது. இன்னும் மாணவர்க்கு மாத்திரமன்றி, மற்றையோருக்கும் பயன்படக்கூடிய பல கட்டுரைகள் இதன்கண் மிளிர்கின்றன. அரசாங்கசபைத் தலைவர் கௌரவ திரு. வை. துரைசுவாமி அவர்களது படமும், ஆசிரியர்களும் ஆசிரிய விடுகை வகுப்பு மாணவர்களும் ஒருங்கேயுள்ள படமும், புதிய சாதனை பாடசாலை படமும், விசேஷ சித்தியடைந்த மாணவர்களது படங்களும் இதனை அலங்கரிக்கின்றன. இவ் வெளியீடு திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை அதிபர் திரு. சி. சுவாமிநாதன் B. A. அவர்களது நிர்வாகத் திறமைக்கும் ஊக்கத்திற்கும் தக்க சான்றாக மிளிர்கின்றது. இவரது நன்முயற்சியை ஏனைய கலாசாலை ஆசிரியர்களும் பின்பற்றி முன்னேற்ற மடைவாராக. எமக்கு அனுப்பிய பிரதியை நன்றியறிதலுடன் ஏற்றோம்.

## நகரசபைக் கூட்டம்

### பெண் நாய்களின்மீது அதிக வரி

புதிதாக அமைக்கப்பெற்ற நகரசபை மண்டபத்தில், சென்ற சனிக்கிழமையன்று முதலாவது கூட்டம் நடைபெற்றது. திரு. கே. வி. சின்னத்துரையும் மாகாண என்ஜினியரும் ஆகிய இருவரையுந் தவிர, ஏனைய அங்கத்தவர்கள் எல்லோருங் கூட்டத்திற்குச் சமுகமளித்தனர்.

நாய்களின் தொகையைக் குறைக்கும் நோக்கமாக விசர்நாய்கள் அதிகப்பட்டுக்கொண்டு வருவதால், பெண் நாய்களின்மீது அறவிடப்படும் வரியை 2 ரூபாவாக அதிகரிக்கச்செய்யவேண்டுமென்று லோக்கல் கவண்மெண்ட் போட்டார் வேண்டிக்கொண்ட வேண்டுகோள் ஆலோசனைக் கெடுத்துக்கொள்ளப்பட்டது.

ஆண்நாய்கள் என்றும் பெண் நாய்கள் என்றும் வித்தியாசம் பாராட்டாமல் வரியைக் கூட்ட வேண்டுமென்று திரு. கே. சோமசுந்தரம் வாதித்தார். திரு. ஓ. பொன்னம்பலமும் அவ்வாறே கூறினார். ஆயின், இவரது வாதத்தில் சிறிது வித்தியாசம் இருந்தது. 2 ரூபா மிக அதிகமான வரியாகும் என்பது அவரது அபிப்பிராயமாகும்.

நகரசபைத் தலைவர் திரு. ஆர். ஆர். நல்லையா அத் தொகை மிக அதிகம் அல்லவென்று வாதித்தார்

ஈற்றில், 1937-ம் ஆண்டு ஜனவரிமீ 1-ந் திகதியிலிருந்து பெண் நாய்களின் வரியை 2 ரூபாவாக உயர்த்தவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

சோனக தெருவிலுள்ள கமால் ஒழுங்கையைத் திருத்துதற்காக 3,300ரூபா ஒதுக்கிவைக்கப்பட்டது.

நகரசபையிலுள்ள வெவ்வேறு பகுதிகள் நடைபெறும் வகையைப் பற்றிப் பரிசீலித்து அவற்றைத் திருத்தி வைக்கும்படி லோக்கல் கவண்மெண்ட் போட்டின் தலைவரது உதவி உத்தியோகஸ்தரை வேண்டிக் கொள்ளுதற்கு நகரசபைத் தலைவருக்கு அதிகாரம் அளிக்கவேண்டும் என்று திரு. எஸ். பதஞ்சலி பிரேரிக்க, திரு. சோமசுந்தரம் அநுமதித்தார். தீர்மானம் நிறைவேறியது.

## ஆட்டையுங் குட்டியையும் திருடிய கள்வன்

### எதிரி வேளாளன்; வழக்காளி பள்ளன்

### எதிரிக்கு ஒரு வருஷக் கடுங்காவலும் இரண்டு வருஷப் பொலிஸ் காவலும்

[ நமதுநிருபர் ]

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் நீதிபதி திரு சி. குமாரசாமி முகதாவில் ஏழாலையில் வசிக்கும் முருகேசு செல்லையா என்னும் வேளாளன் கட்டுவனில் வசிக்கும் பள்ள வகுப்பைச் சேர்ந்த முருகன் சுப்பன் என்பவனுடைய ஒரு மறியாட்டையும் அதன் இரண்டு குட்டிகளையும் சென்ற பங்குனி மாதம் 26ந் திகதி இரவு களவாடியதாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

முருகன் சுப்பன் கூறியதாவது:—

சென்ற பங்குனி மீ 26ம் திகதி இரவு நான் எனது வீட்டுப் பின் புறத் தாழ்வாரத்தில் எனது மறியாடு ஒன்றையும் அதன் குட்டி இரண்டையு கட்டினேன். மறுநாள் காலை எழுந்து பார்த்தபோது ஆட்டையு குட்டிகளையும் காணவில்லை. இதைப்பற்றி நான் விதானையாரிடம் அறிவித்துவிட்டுத் தேடிப்பார்த்தேன். இப்படித் தேடும்போது றோட்டில் பண்டத்தரிப்பிலிருந்துவந்த ஒருவர் யாரோ ஒருவன் ஒரு ஆட்டையும் இரண்டு குட்டிகளையும் கொண்டு கடந்து பண்டத்தரிப்பு றோட்டால் போவதாகக் கூறினார். நான் அவ்வழியே தேடிச் சென்றேன்.

நான் இப்படித் தேடிப்போகும்போது அளவெட்டித் தமிழ் வயித்தியர் கந்தப்பிள்ளை என்பவருடைய வீட்டுப்படலைக்கு அருகில் ஓர் ஒழுங்கையால் இவ்வெதிரி ஆடுகளுடன் வரக்கண்டேன். இந்த இடத்தில் ஓர் கடை இருந்தது. அக்கடைக்காரன் இந்தவிஷயத்தை அறிந்ததும் ஐயாத்துரை என்னும் ஒருவரை எனக்கு விதானை வீட்டைக் காட்டிவிடும்படி அனுப்பினார். நான் எதிரியையும் ஆடுகளையும் கொண்டு விதானை வீட்டை அடைந்தேன். அங்கு நடந்ததெல்லாவற்றையும் அவருக்குச் சொன்னேன்.

குறுக்குவிசாரணையின்போது வழக்காளி கூறியதாவது:—

நான் ஓர் பள்ளன். எதிரி ஓர் வேளாளன். எதிரி ஏழாலையில் வசிப்பவர். எதிரியை எனக்கு இதற்கு முன் தெரியாது. நான் இது சம்பவத்தன்று காலை 6 மணிக்குத்தான் எழும்பினேன். நான் கூலிப் பிழைப்புக்குப் போவதால் வழக்கமாக 6 மணிக்குத்தான் நித்திரைவிட்டு எழும்புவேன். நான் முன் ஓர் வழக்கில் 4 மாதம் மறியலுக்குப் போனேன். எனக்கும் இவ்வெதிரிக்கும் ஒருவகையான கொடுக்கல் வாங்கலும் கிடையாது. நான் முதல் விதானைக்கு அறிவித்தேன். விதானைக்கு அறிவித்த பின்புதான் இவ்வெதிரி ஆடுகளுடன் செல்கிறான் என அறிந்தேன். எனக்கு இதைச் சொன்னவரைத் தெரியாது. அவர் இவ்வெதிரியை அளவெட்டிக் காத்தவிராயர் கோவிலடியில் தாம் சந்தித்ததாகச் சொன்னார் நான் இவ்வெதிரியை அன்று காலை 8 மணியளவிலேயே சந்தித்தேன். எதிரியைப் பிடிக்கிறதற்காக றோட்டில் ஓடினேன். விதானை வீட்டுக்குக் கையில் எதிரியைப் பிடித்துக்கொண்டே போனேன். அப்போது எதிரி தப்பி ஓடத் தெண்டிக்கவில்லை இருபகுதிச் சாட்சிகளையும் விளங்கிய பின் நீதிபதி எதிரியைக் குற்றவாளியெனக் கண்டிருப்பதாக கூறியபோது முடிக்குரிய நியாயவாதி எதிரி முன்னும் 5 குற்றங்களில் மறியலுக்குச் சென்றிருப்பதாகக்கூறினார். இவற்றில் மூன்று முறை இதே மாதிரியான ஆட்டுக்களவில் சென்றிருந்தான். நீதிபதி எதிரிக்கு ஒரு வருஷக் கடுங்காவல் மறியலும் இரண்டு வருஷ பொலிஸ் காவலும் விதித்தார்.

## சாவகச்சேரிக் கிராமச் சங்கப் பொதுக்கூட்டம்

மேமாதம் 20-ந் திகதி கூடிய சாவகச்சேரிக் கிராமச் சங்கத்தின் பொதுக் கூட்ட நடவடிக்கைகள் வருமாறு:-

சென்ற கூட்ட நடவடிக்கைகளைப் பற்றிய அறிக்கை வாசித்து அங்கீகரிக்கப்பட்டது.

(1) கவண்மெண்ட் ஏஜெண்டின் No. V. C. 5272 சுற்றறிக்கையைப்பற்றி ஆலோசனை செய்யப்பட்டு சாவகச்சேரிச் சந்தைச் சேமநிதியாக 1000 ரூ. குடிலோன் பாங்கில் போடவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

(2) சந்தைக்குத் தெற்குப் பக்கத்தில் தொடர்ச்சியாகப் பத்து அறைகளைக் கட்டுதற்கு 5500 ரூ. ஒதுக்கி வைக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

(3) சந்தையில் தேங்காய் வியாபாரிகளுக்கு ஓர் கடையைக் கட்டுவதற்கு 1000 ரூ ஒதுக்கி வைக்கப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

(4) சாவகச்சேரியில் எலக்ரிக் விளக்குகளை ஏற்படுத்துதற்காகிய ஆயத்த வேலைகள், பிளான்கள், மதிப்புகள் முதலியவற்றைச் செய்வதற்கு 300 ரூ. ஒதுக்கிவைக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

இன்னும் சந்தையிலுள்ள வேறு திருத்தங்கள் சம்பந்தமாகவும் பிறவற்றிற்காகவும் உபமான்யங்கள் விடப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

மேலும், சில கிளைச்சங்கங்கள் சம்பந்தமான திருத்தங்களும் செய்யப்பட்டபின், கூட்டம் இனிது நிறைவெய்தியது.

# மாசு கொடுக்க மறுத்தமையால் கொலை!

## மடியில் தராசுப்படிகளை ஒளித்த எதிரி

### குத்தகைக்காரர் சாட்சியம்

நமது நிருபர்

சென்ற 12-6-36 வெள்ளிக்கிழமை சாயங்காலம் யாழ்ப்பாணம் சின்னக்கடையில் கடைவைத்திருக்கும் ஷவுல்ஹமீது என்னும் ஓர் இஸ்லாமானவரைக் கரையூரில் வசிக்கும் சின்னத்துரை என்பவன் (ஷவுல் ஹமீது) கடையிற் போய்ப் பணமில்லாமல் மாஸ் கேட்டபோது கடைக்காரர் மாஸ்கொடுக்க மறுத்தமையால் இரு படிகளை எடுத்துச் சென்றான். இதைச் சின்ன மாக்காயர் என்னும் அக்கடையின் வியாபாரி ஒருவர் ஷவுல் ஹமீதுக்குச் சொல்ல அவர் கடைக்கு வெளியே சென்று பார்த்தபோது எதிரியைக் கண்டார். அவனைக் கண்டதும் "ஏன் படிகளை எடுத்தாய்?" என்று சொல்லி அவனது மடியிலிருந்த படிகளில் பிடிக்க அவை கீழே விழுந்தன. எதிரி ஷவுல் ஹமீதுக்கு அடித்தான். ஷவுல் ஹமீதும் எதிரிக்கு அடித்தார். இருவரும் நிலத்தில் விழுந்தனர் பின் ஷவுல் ஹமீது ஓடினர். இதற்கிடையில் ஷவுல்ஹமீது திரும்பவும் விழுந்தார். எதிரி அவரிடம் ஓடிச் சென்று அவர்மீது ஏறியிருந்து ஓர் கிறிஸ் கத்தியாற் குத்தினான். காயக்காரன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டான். ஆஸ்பத்திரியில் அன்றிரவே இறந்துவிட்டான் பொலிசார் எதிரியை அன்றிரவே கைதியாக்கினர்.

13-6-36 சனிக்கிழமை காலை 7 மணியளவில் இறந்தவனுடைய கடையில் பொலிஸ் நீதிபதி விசாரணையை நடத்தினர். அப்போது சின்ன மாக்காயர் சாட்சியம் கூறிய பின் சின்னக்கடைக் குத்தகைக்காரனாகிய வயிரமுத்து இராசேந்திரம் கூறியதாவது:—

நானே இச்சந்தையில் குத்தகைக் காசு அறவிடுபவர். நேற்று 6 மணியளவில் நான் இங்கே காசு அறவிடும்பொருட்டு நின்றேன். அப்போது ஒரு சத்தம் கேட்டது இக்கடையில இருப்பவரில் ஒருவர் ஓடிச்சென்று கானில் விழுந்தார், திரும்பவும் எழுந்து ஓடிச் சென்று கானில் விழுந்தார். இந்த எதிரி அவர் முதல் முறை விழுந்து எழுந்து ஓடும்போது பின் தொடர்ந்தார். அவர் இரண்டாம் முறை விழுந்த போது அவருக்கு மேல் ஏறி இருந்து ஓர் கிறிசால் அநேகமுறை குத்தினான். எத்தனை முறை அவன் குத்தினன் என்று நான் எண்ணவில்லை. (கத்தியைக்காட்டி) இந்தக் கத்திதான் எதிரியின் கையிற் காணப்பட்டது. நான் அவ்விடம் ஓடி இக்கத்தியை எதிரியிடமிருந்து பறித்து எடுத்தேன். கத்தியைப் பறித்துவிட்டு எதிரியையும் பிடித்தேன். நான் கத்தியைப் பறித்தபோது முதல் பிடி தான் எனது கைக்கு வந்தது. பிடியைப் பறித்தபின தான் கத்தியைப் பறித்தேன் (Blade) நான் கத்தியைப் பறித்தபோது கத்தியில் இரத்தம் இருந்தது. எதிரியினுடைய கையில் ஒரு காயத்தையும் நான் காணவில்லை.

காயக்காரனை உடனே கடைக்குக் கூட்டிக்கொண்டுவந்தார்கள் அதன் பின் பொலிஸ்டேசனுக்குக்கொண்டு சென்றார்கள். நான் எதிரியோடு பேசிக்கொண்டு நின்றேன். அப்போது எதிரி தான் வேட்டி கட்டப்போவதாகத் தன் கையை விடும்படி கேட்டார். நான் கையை விட்டேன். அவன் ஓடிவிட்டான் எனக்கு எதிரியின் பேர் தெரியாது. ஆனால் எதிரியின் விபரங்களைப்பற்றி(அடையாளங்கள் பொலிசாருக்கு அறிவித்தேன் இதற்கு முன்னும் இவ்வெதிரியை நான் இங்கே கண்டிருக்கிறேன எதிரி அப்போது வெள்ளை வேட்டியும் கோடுபோட்ட சேட்டும் சால்வையும் அணிந்திருந்தான். எதிரிக்கு வாயிலிருந்து இரத்தம் வடியக் காணப்பட்டது நான் எதிரியுடன் நின்றபோது எதிரிக்கு யாரும் அடிக்கவில்லை. எதிரி இக்கத்தியை வலது கையில் தான் வைத்திருந்தான் நான கத்தியை எதிரியிடமிருந்து பறிக்கும்போது எதிரியைக் கழுத்திற் பிடித்து அமர்த்திக்கொண்டு தான் பறித்தேன். இச்சம்பவம் நடக்கும்போது வெளிச்சமிருந்தது. கடைகளுக்கு விளக்கு ஏற்றிவிட்டார்கள். நான இதற்குப் பிறபாடு எனது வேலைக்குப் போய்விட்டேன். கத்தியை நானே வைத்திருந்து பொலிசார் வசம் ஒப்புவித்தேன். கத்தியிலிருந்த இரத்த அடையாளங்கள் எனது கைபட்டமையால் எடுபட்டிருக்கக் கூடும். நான் பொலிசாருக்கு எனது வாக்குமூலத்தைக் கொடுத்தேன்

மூன்றாவதாகக் காதர் சாஹிப் கூறியதாவது:—

"நான் சுல்தான் என்பவருடைய கடையில் விற்பனவுகாரனாக இருக்கிறேன். நேற்று 6 மணியளவில் எனக்குச் சின்ன மாக்காயர் எதிரி மாசு வந்து கேட்டதாயும் மறுத்தபோது இரு படிகளை எடுத்துச் சென்றதாயும் கூறினர், அப்பொழுது ஷவுல்ஹமீதும் கடையிலிருந்தார். எதிரி மாசு கேட்டபோது நான் பார்த்தேன். கேட்டுத் திரும்பிப்போன பின் ஷவுல் ஹமீது எதிரியிடம் படிகளை ஏன எடுத்தாய் என்று விசாரித்ததும் எனக்குக் கேட்டது. எதிரி தான் படிகளை எடுக்கவில்லை என்று சொன்னர் ஷவுல் ஹமீது எதிரியின மடியைப் பிடித்தார். மடியிலிருந்து படிகள் கீழே விழுந்தன. இருவரும் ஒருவர்க்கொருவர் அடித்துக்கொண்டு நிலத்தில் விழுந்தார்கள். ஷவுல் ஹமீது எழுந்து ஓடினர். எதிரி மடியிலிருந்த கிறிஸ் கத்தியை எடுத்துக்கொண்டு ஷவுல் ஹமீதுவைத் துரத்திச்சென்றார். ஷவுல் ஹமீது திரும்பவும் விழுந்தார். எதிரி ஷவுல்ஹமீது மேல் ஏறி இருந்துகொண்டு இரு முறை கிறிசால் குத்தினர். காயக்காரனை கடைக்குக் கூட்டிக்கொண்டுபோய் அதன்பின் பொலிஸ்டேசனுக்குச் சென்றனர். எதிரி குத்தினபோது இராஜேந்திரம் பிடித்தார். அல்லாமலும் அவனுடைய கையிலிருந்து கிறிசையும் பிடுங்கினர். எதிரி அந்த நேரத்தில் மதுபானம் குடித்துவெறியோடிருந்தார் இதன்பின் முசைதீன் பிச்சை கூறியபின மேல் விசாரணையை வருகிற 18-6-36க்கு ஒத்திவைத்தார்.

---

## கத்திக்குத்து வழக்கு

### எதிரி விசாரணை செய்யப்பட்டான்

யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிபதி முகதாவில் சென்ற 11-6-36 வியாழக்கிழமை ஆனைக்கோட்டையில் வசிக்கும் வைரமுத்து-சின்னையா என்பவனை கல்லூரைச்சேர்ந்தவனும் ஆனைக்கோட்டையில் விவாகம் செய்துகொண்டவனுமாகிய வல்லிபுரம்-செல்லப்பா என்பவன் ஓர் மடித்த வில்லுக்கத்தியால் குத்திக்காயப்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டித் தொடர்ந்த வழக்கில் எதிரி கூறிய சாக்ஷியம் வருமாறு:—

நான் ஆனைக்கோட்டையில் விவாகஞ்செய்துள்ளேன். எனது மனைவி வழக்காளிக்கு இனத்தவள் அவன் எனது விவாகத்துக்கு மாறாக உள்ளவன். அது சம்பவத்தன்று (10-7-35) பிற்பகல் 2 மணியளவில நான் ஓர் கடைக்குப் போனேன். அங்கே நான் நிற்கும்போது கனகு என்பவர் என்னுடன் வந்து பேசினர். அப்போது வழக்காளி வந்து கனகுவை என்னுடன் கதைக்க வேண்டாமெனக் கூறினன். "அவன் என்னுடன் கதைத்தால் உனக்கு என்ன" என்று நான் கேட்டேன். அவன் எனக்கு அடித்தான். நானும் அவனுக்கு அடித்தேன். இருவரும் கட்டிப்பிடித்துக் கீழே விழுந்தோம்; வழக்காளியின மருமகன் செல்லத்துரை ஓடிவந்து எனக்குக் கத்தியால் குத்தினன்; வழக்காளியின சகோதரன மாணிக்கம கல்லால் எறிந்தான். நான் இச்சம்பவத்தைப் பொலிசாருக்கு அறிவித்தேன்; பொலிசார் வந்து இதைப்பற்றி விசாரணை செய்தார்கள். இதன்பின, பொலிசார் செல்லத்துரை மீதும் மாணிக்கம்மீதும் வழக்குத்தொடர்ந்தார்கள்; இவ்வழக்கில் செல்லத்துரைக்கு 50 ரூபா அபராதமும 6 மாத கன்னடத்தையும் விதிக்கப்பட்டன; மாணிக்கம் என்பவனுக்கு 25 ரூபா அபராதம் தீர்க்கப்பட்டது; நான வழக்காளிக்கு அடிக்கவில்லை.

இதன்பிற்பாடு கோவிந்து சின்னத்துரை என்பவன் விசாரணை செய்யப்பட்டான்; அதன்பின் எதிரியைக்குற்றவாளியெனக் கண்டு எதிரிக்கு 50 ரூபா அபராதமும் ஒரு நாள் மறியலும் விதிக்கப்பட்டன அபராதப்பணம் கட்டத்தவறினல் ஆறுமாத மறியலிருக்க வேண்டுமெனவும் விதிக்கப்பட்டது. [ந. நி.]

---

## Notice of Sale by Court
## கோட்டுவிற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண ஸ்திதிக்கோட்டின் 19846ம் இலக்கவழக்கில் ககூஙக ஹு வைகாசிமீ 14ந் தேதியைக்கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் காணிகள் ககூஙக ஹு ஆடிமீ 9ந்தேதி வியாழக்கிழமை பிற்பகல் $4\frac{1}{2}$ மணி தொடக்கம் நல்லூர் காணியும், ஆடிமீ 11ந் தேதி சனிக்கிழமை பிற்பகல் $4\frac{1}{2}$ மணிதொடக்கம் பூநகரிக் காணிகளும் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விபரம்

கொழும்புத்துறை ஆறுமுகம் முத்துக்குமாரு வழக்காளி (காலஞ்சென்றுவிட்டார்.

(1) முத்துக்குமாரு கைம்பெண் அன்னபூரணம் (2) R. சண்முகம் (next friend of 3) மு. தியாகராசா (4 மு. ஆறுமுகம் பதில் வழக்காளிகள்

எதிராக.

1. கறுக்காதீவு முருகர் குமாரசாமி
2. நல்லூர் வேலு இராமலிங்கம் -எதிராளிகள்

1 யாழ்ப்பாணப்பிரிவு நல்லூர் இறை 'மாதகல் வளவும் தண்ணி வாயும்'' என்னும் காணி பரப்பு நில இலா 3 மேற்கும் காணிக்குளிருக்கும் கிணற்றிற் பங்கும் வழி வாய்க்கால் பாவிப்புரிமையும். எல்லை வடக்கு காசுமுத்து இராமலிங்கத்தின் ஆதனம், கிழக்கு அருகும நாயகம் முதலியாரின் ஆதனம். தெற்கு ரேட்டு, மேற்கு வல்லிபுரம் கைம்பெண் சின்னப்பிள்ளையின் உரிமைக்காரரின் ஆதனம் இதடங்கலும்,

2. பூநகரிக்கோவிற்பற்று கறுக்காதீவுஇறை "விசிலன் தறை" என்னும் காணி பரப்பு நெல் இல 43 அதற்குச் சேர்ந்த பயிர் வகைகளும் எல்லை வடக்கும் மேற்கும் நாகலிங்கம் வைத்தியலிங்கத்தின் ஆதனம் கிழக்கு கார்த்திகேசு சின்னத்தம்பிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், தெற்கு கதிர்காமர் விருந்தம்பியின் ஆதனம் இது முழுவதும்.

3 பூநகரிக்கோவிற்பற்று கறுக்காதீவுஇறை 'கதைதப்பள்ளம்'' என்னும்காணி பரப்புநெல் இலா 55. எல்லை வடக்கு தண்ணீர் வாய்க்கால், கிழக்கு 1ம் எதிரியின் ஆதனம், தெற்கு விதையா நிலம், மேற்கு S. வல்லிபுரத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் இதடங்கலும்,

Veerasingham & Ramaswamy
கொமிஷனர்.

யாழ்ப்பாணம்
பெரியதெரு
12-6-36
Mis 55 15-6-36.

---


## யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம் (வரைவுள்ளது)

விசேட மகாசபை

இந்த ஆனிமீ 27உ சனிக்கிழமை சாயுங்காலம் 2 மணிக்கு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி றேட்டிலுள்ள இச்சங்கத்துக் கந்தோர் 'மகாமண்டப'த்திலே ஒருவிசேட மகாசபைக் கூட்டம் நடைபெறும்.

விஷயம்

30-9-35ல் நடைபெற்ற இச்சங்கத்து 17ம் வருடாந்தக் கூட்டத்தில் இச்சங்கப் பிரமாணங்களுள் வேண்டிய திருத்தங்கள் செய்தற்காக நியமிக்கப்பட்ட உபசபையார் செய்துள்ள திருத்தங்களையும் அறிக்கையையும் ஏற்றுக்கொள்ளுதல்.

S. V. இராசசேகரம்,
அக்டிங் காரியதரிசி.

(Mis. 50. 8-6-36 to 15-6-36.)

## இலங்கை சேவிங் வங்கி

இந்த வங்கியிற் பணஞ் சேமித்து வைப்போரின் வருடாந்த பொதுக்கூட்டம் 1936ம் ஹு ஜூன் மீ 26-ந்உ வெள்ளிக்கிழமை சாயந்தரம் 4-30 மணிக்கு புதிய மந்திராலோசனை மண்டபத்தின 1:ம் சங்கசாலையிற் கூடப்படும்.

சே. ஏ. எஸ். ஹோமர்,
லிகிதர்,

1936-ம் ஹு ஜூன் மீ 10-ந் உ.
G. 28, 15-6-36.


---

## பலாலியில் கத்திவீச்சு

### படுகாயமுற்றவன் கோவியன் எதிரி வேளாளன்

### வழக்காளிகூறிய ருசிகரமான சாக்ஷியம்

"சுவாமிநாதரைக் குத்தினதற்கு 3மாதம் மறியல்போனேன்; விதானை வைப்பாட்டியைக் கடத்திச்செல்ல எத்தனித்த போது விதானையைக் கொன்றேன்"

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் பலாலியில் வசிக்கும் சிதம்பரப்பிள்ளை — தப்பிப்பிள்ளை என்னும் ஓர் வேளாளன் அவ்வூர் சின்னப்பொடியன் — நாகமுத்தன் என்னும் ஓர் கோவியனைக் கத்தியால் குத்திப் படுகாயப் படுத்தியதாகக் குற்றஞ்சாட்டித் தொடர்ந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப் பட்டது.

வழக்காளி சார்பாக முடிக்குரிய நியாயவாதி திரு எஸ். சனகசபையும் எதிரி சார்பாக ஜி ஸ்பென்சரும் திரு T. C. இராசரெத்தினமும் வாதித்தனர்.

வழக்காளியாகிய நாகமுத்தன் கூறியதாவது:—

நானும் மாசி மீ 20 ம் திகதி 3 மணியளவில் எனது மருமகன் வேலுப்பிள்ளையும் தோட்டத்திலிருந்து புகையிலைக் கன்றுகளைப் பிடுங்கிக் கொண்டு அவற்றை வேறிடத்தில் இருக்கும் எனது தோட்டத்தில நடப் போனோம். நாங்கள் இருவருமாகத் தோட்டத்திலிருந்து றோட்டில் வந்தபோது இந்த எதிரியும இன்னுமொருவருமாகப் பக்கத்தே இருந்த ஓர் மதகடியில் இருந்தார்கள். எங்களைக் கண்டதும் இவ்வெதிரி என்னைப் பார்த்து "நீதானேடா எனது புகையிலைக்கன்றுகளைப்பிடுங்கி அழித்தது என்று சொல்லிக் கொண்டுவந்து எனது கழுத்தை வெட்டக் கத்தியை ஓங்கினன். அவ்வெட்டு எனது தோளில் விழுந்தது. வெட்டு விழுந்ததும் எனது கையிலிருந்த புகையிலைக் கன்றுக் கட்டும் சால்வையும் கீழே விழுந்து விட்டன நான் விழுந்த சால்வையையும் புகையிலைக் கன்றுக் கட்டையும் குனிந்து எடுத்தேன். அப்போது எதிரி திரும்பவும் கழுத்துக்குக் கத்தியால் ஓங்கினன். நான் எனது கையைக் கொடுத்துத் தடுத்தேன். அப்போது தான் எனது கையில் வெட்டு விழுந்தது நான் இவ்வெட்டை வாங்கிக் கொண்டு அந்தஇடத்திலேயேசிறிது நேரம் இருந்து விட்டு வீட்டுக்குப் போகலாம் என்று நினைத்துச் சிறிது தூரம் நடந்தேன் இவற்றை எல்லாம் வேலுப்பிள்ளை கண்டான். இச் சத்தம் கேட்டுப் பண்டாரி வயித்தி அவ்விடம் வந்தான்.

நான் கொஞ்சத் தூரம் நடந்ததும் கீழே விழுந்து விட்டான். இதன் பிற்பாடு வேலு ஆறுமுகத்தான் அவ்விடத்திற்கு வந்தான. அவனிடம் இதை விதானைக்கு அறிவிக்கும்படி நான் சொன்னேன். அவனிடம இன்னார்தான் எனக்கு வெட்டினது என்றும் சொன்னேன். உடனே விதானை அவ்விடம் வந்தார். அவருக்கு எனது வாக்குமூலத்தைக் கொடுத்தேன். அவர் என்னை ஆஸ்பத்திரிக்கு ஏற்றிச் சென்றார் நான் ஆஸ்பத்திரியில 32 நாள் சிகிச்சைக்காக இருந்தேன். எனக்கும் எதிரிக்கும் கதிராசி சின்னத்தங்கம் என்பவளை யிட்டுத் தான் பகை உண்டு பட்டது.

குறுக்கு விசாரணையின் போது சாக்ஷி கூறியதாவது:—

எனக்குக் கதிராசி சின்னத் தங்கத்தைத் தெரியும. அவளுக்கு நான் கத்தியால் குத்தின வழக்கு இந்தக் கோட்டில் இருக்கிறது அந்த வழக்கில் இவ்வெதிரி எனக்கு மாறாகச் சாட்சி கூறினன்.

அந்த வழக்குச் சென்ற கார்த்திகை மாதம் வைக்கப்பட்டது. நான் எதிரியைச் சென்ற மார்கழி மாசத்தில் அவனுடைய புகையிலைக் கன்றுகளை வெட்டி அழிப்பதாயும் அவனை வெட்டிக் கொல்லுவதாயும் வெருட்டவில்லை. நான பொலிசதிகாரிகளுக்கு எதிரிக்கு மாறாகப் பெட்டிசம் கொடுக்கவுமில்லை- இதையிட்டு விதானையார் என்னை எச்சரிக்கவும் இல்லை நான் எனது கிராமத்தில் ஓர் சண்டியனல்ல நான் கத்தி கொண்டு திரிகிறவனுமல்ல நான் கத்தி கொண்டு திரிவதாகப் பெட்டிசம் போட்டதைப் பற்றி எனக்கு ஞாபகமில்லை இதைப்பற்றி மணியகாரன் விளங்கி எச்சரிக்கை செய்யவில்லை இவையெல்லாம் இவ்வெதிரி சாட்சியம் கூறிய பின்னரே நடந்தவையாகும்.

நான் பலாலி விதானையாரை 1914 ம் ஆண்டில் கொலை செய்தேன். அவரைக் கத்தியால் குத்தித் தான் கொலை செய்தேன்.

சுவாமிநாதர் என்ற ஒருவருக்குக் கத்தியால் குத்தினதற்கு 3 மாசம் மறியலுக்குப் போனேன். பலாலி விதானையின் வைப்பாட்டியைக் கடத்திச் செல்ல எத்தனித்த போது தான் விதானையைக் கொன்றேன். நான் இவ்வெதிரியைக் கொல்லுவதாகப் பயமுறுத்தவில்லை. எதிரியினுடைய புகையிலைக் கன்றுகள் வெட்டி அழிக்கப்பட்டன வென்று அறிந்தேன். ஆனால் நான் அழிக்கவில்லை நான் பொலிஸ் கோட்டில் 3 சாட்சிகளின் பேரைக் கொடுத்தேன். அவர்கள் வேளாளர்கள். ஆகையால் எனக்குச் சாட்சிசொல்ல மறுத்தனர் இவ்வெதிரிக்கு மாறாகச் சொல்லக் கூடியவர்களும் அக்கிராமத்தில் அநேகர் உளர்.

முதல் வெட்டு அவன் வெட்ட எத்தனித்தபோது நான் அவனுடைய மணிக்கட்டில் அடித்துத் தடுத்தேன். அப்போதுதான் கத்தியின் நுனி தோள்மூட்டில் வெட்டிற்று. திரும்பவும் அவன் கழுத்துக்குக் கத்தியை ஓங்கினன். அந்த வெட்டுத்தான் எனது கையில் விழுந்தது. முதல் வெட்டு விழுந்ததும் நான் புகையிலைக் கன்றுக் கட்டையும் சால்வையையும் எடுக்கக் குனிந்து அதை எடுத்துக் கொண்டு எழும்பினதும் மறு வெட்டு வெட்ட எத்தனித்தான். முதலாம் வெட்டுடன் எதிரி பின்நோக்கினது போல் காணப்பட்டமையே நான் அவ்வளவு பொறுமையாக இருந்து புகையிலைக்கட்டையும் சால்வையையும் எடுத்துக்கொண்டு எழும்பினதற்கு நியாயம். ஆனல் இதற்கிடையில் அவன் இரண்டாம் வெட்டுக்குக் கத்தியை ஓங்கினன். நான் இப் புகையிலைக் கன்றுகளை வேறு ஆட்களுடைய தோட்டத்திலிருந்து பிடுங்கிக் கொள்ளவில்லை. எனது மச்சானுடைய தோட்டத்தில்தான் பிடுங்கினேன். நான் சத்தம் போடவில்லை.

இதன்பின் கோவிந்தர் வேலுப்பிள்ளையை விசாரணை செய்ததும் நீதிபதி வழக்கை 17-6-36 க்குத் தவணையிட்டார் (நமது நிருபர்)

## கார் விபத்து.

கொண்டாவிலில் X. 4397 இலக்கமிடப்பட்டகாரில் டிறைவராக வேலை பார்க்கும் ஓமன் ஆபிரகாமம் என்பவன் சென்ற 19-3-36ல் யாழ்ப்பாணம் பெரியகடைவீதியில் தள்ளுவண்டிக்கார முருகர்-ஐயம்பிள்ளை என்பவரைக் காரால் தட்டிவீழ்த்திக் காயப்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டித் தொடர்ந்தவழக்கு யாழ்ப்பாணம் உதவிப்பொலிஸ்நீதிபதியால் விசாரிக்கப்பட்டது. விசாரணையின் பின் நீதிபதி எதிரியைக்குற்றவாளியெனக்கண்டு எதிரிக்கு 26ரூபா அபராதம் விதித்தார்.


## தேவை

சுதேச மிருக வைத்திய சாஸ்திரம் சம்பந்தமாக விரிவுரைகள் நிகழ்த்தவல்ல ஓர் ஆசிரியர் தேவை. ஒவ்வொரு விரிவுரைக்கும் அவர் கோரும் சம்பளம் இன்னது என்பதையும் மனுப்பத்திரத்தில் தெரிவித்தல் வேண்டும். மனுப்பத்திரங்களைக் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புக.

ரிஜிஸ்ட்றார்,
சுதேசவைத்திய-கல்லூரி
கொழும்பு.

(G 27, 15-6-36)

# தினந்தோறும் தியானஞ் செய்யும் சிங்கம்

## ஆட்டுக்குட்டிபோல் அடங்கிநடக்கும்விந்தை பிரணவ மந்திர செபம்

### பண்டைக்காலத்தில் மிருகங்கள் தெய்வத்தை விளங்கின என்று காட்ட முயலும் யோகி

பம்பாயில் யோகேஷ் கிரியிலுள்ள குகையொன்றில் இருக்கும் யோகியொருவர் சென்றவாரம் ஒரு பெண் சிங்கத்தோடும் நாயோடும் வில்லாவிற்குச் சென்றிருந்தார். யோகியாரையும் சிங்கத்தையும் பார்க்கும்படி கணக்கிறந்த சனங்கள் அந்த யோகியிருக்குமிடத்திற்குத் தினந்தோறும் போகத் தலைப்பட்டனர். இக்கிப பிரதிக்ஞாவலரும் இதனைக் கேள்விப்பட்டு யோகியாரைத் தம்முடைய மாளிகைக்கு அழைக்க அவர் சிங்கத்தோடும் நாயோடும் அங்கேபோய்ச்சேர்ந்தார். பிரதிகாவலருக்கும் பாரியாருக்கும் அந்தச் சிங்கம் சாத்வித குணத்தோடு நடப்பது ஆதனமாக விருந்தது. யோகியார் சொன்னபடி பிரதிகாவலரும் பாரியாரும் அச்சிங்கத்தின் முதுகைத் தடவி அன்புடன் கையால் தட்டினர். சிங்கம் அச்சமையத்தில் ஆட்டுக்குட்டி போல் நல்ல சுபாவமாக நின்றது. அதற்கு இப்பொழுது வயசு 4 ஆகும். இப்படியெல்லாம் இம்மிருகம் இருப்பதற்குக் காரணமென்னவென்று பிரதிகாவலர் யோகியாரை வினவியபோது அவர் பின்வருமாறு சொன்னார்:—

"நான் இந்தச் சிங்கத்திற்கு அது குட்டியாக இருந்த காலந் தொடக்கம் சாத்விக குணத்தையே பயிற்றி வந்தேன்; தெய்வத்தின் தன்மை இதற்கு விளங்கும்; இந்த விஷயத்தில் என்னுடைய நாய்க்கு இன்னும் அதிகம் பயிற்சியுண்டு இதனால் இந்நாய்க்கு இச்சிங்கம் பயப்படும். இச்சிங்கம் தினந்தோறும் காலையில் பிரணவத்தை உச்சரித்துக்கடவுளைத் தியானிக்கப் பழக்கியிருக்கிறேன்; இப்படிப்பயின்ற காட்டுமிருகங்கள் எங்கள் குகைகளில் இன்னும் பல இருக்கின்றன. மிருகங்கள் தெய்வத்தை விளங்கின, தெய்வத்தன்மை பெற்றன என்று எங்கள் புராதன நூல்களிற் சொல்லப்பட்டிருத்தலை விட்டு இக்காலத்திலுள்ளார் சந்தேகப்படுவது பிழை; இந்த உண்மையை உலகத்தவர்க்குக்காட்டவேண்டுமென்பது என் விருப்பம்."

இந்த யோகியின் நாமம் கிருஷ்ணானந்தர். இவர் பம்பாயிலுள்ள கிருஷ்ணாச்சிரமத்தைச் சேர்ந்தவர்.

---

### மயிலிட்டி தெற்கு பாலர்ஞானோதய சங்கம்

#### 18—ம்ஆண்டு நிறைவு விழா

இச் சங்கத்தின் 13-ம் ஆண்டு நிறைவு விழாக் கூட்டம் நிகழும் தாது வருஷம் வைகாசி௴ 24-ம், 25-ந் உ களில் (6, 7-6—36) ஆகிய சனி, ஞாயிறுவாரங்களில் மயிலிட்டி தெற்குப் பாலர் ஞானோதய சங்க வித்தியாசாலை மண்டபத்தில் சங்கத் தலைவர் வித்துவான் பிரம்மஸ்ரீ சி. கணேசையாவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது.

முதலாம் நாளாகிய சனிக்கிழமை சமய குரவர்களில் ஒருவராகிய திருஞானசம்பந்த சுவாமிகளின் குருபூசைத் தினமாகையால் சுவாமியின் திருவுருவப்படத்துக்குப் பூசை நடைபெற்றது. அதன்பின் கூட்டம் தேவாரபாராயணத்தோடு மாலை $6\frac{1}{2}$ மணியளவில் ஆரம்பமாயிற்று. தலைவரவர்கள் தமது தலைமைப்பேருரையில், சங்க நிதவரையும், செய்துவந்த வேலைகளைப் பற்றியும், இனிமேற் செய்யப்படவேண்டிய வேலைகள் எவை யெவையென்பதைப் பற்றியும், விரிவாகப் பேசினர். அதன் பின் கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ஸ்ரீமத் பண்டித வ. சு. இராஜஐயரவர்கள் 'திருவள்ளுவர்' என்னும் பொருள்பற்றி அவருடைய பிறப்பு, சாதி, அவர் தமிழில் செய்த திருக்குறள், எச்சாதியினருக்கும், எச் சமயத்தவருக்கும், எப்பாஷையிலுள்ளவர்க்கும், ஒரு பொதுவான அரிய பொக்கிஷமென்பதைப்பற்றி மிகவும் விரிவாகவும், தெளிவாகவும் பேசினார். மானிப்பாய் இந்துக்கல்லூரிப் பிரதமாசிரியர் ஸ்ரீமத் வி. வீரசிங்கம் B. A. அவர்கள் 'ஞான உதயம்' என்னும் விஷயத்தை, பீடிகையாகக்கொண்டு, கடவுளுக்குப் பயப்பட்டு அவரை அன்போடு வழிபடுதலே ஞானநிலையை அடைவதற்கு முதற்படியென்றும், பெற்றோரும் ஆசிரியரும் சிறுவர்களை இந்நிலைக்குக் கொண்டுவருதற்குக் கைக்கொள்ள வேண்டிய முறைகள் எவை எவை என்றும் கற்றவர், கல்லாதோர் சிறியவர், பெரியோர் என்ற பேதமின்றி எவரும் இலகுவில் விளங்கக்கூடியவாறு மிகவும் இனிமையாகவும், தெளிவாகவும், பேசிமுடித்தனர். ஈற்றில் தலைவர் அவர்களாலும் ஈழகேசரிப் பத்திராதிபர் திரு. நா. பொன்னையா அவர்களாலும் குறிப்புரைகளும் சங்கத்தின் உபதலைவர்களிலொருவராகிய ஆசிரியர் திரு. சி. கந்தவனம் அவர்களால் சங்கத்தின் பேரால் பிரசாரகர் மாருக்கும் சபையோர்க்கும் நன்றி கூறக் கூட்டம் $9\frac{1}{2}$ மணியளவில் தேவாரபாராயணத்தோடு இனிது நிறைவேறியது.

இரண்டாம் நாளாகிய ஞாயிற்றுக்கிழமை மாலை $6\frac{1}{2}$ மணியளவில் கூட்டம் தேவாரபாராயணத்தோடு ஆரம்பமாயிற்று. அக்கிராசனரின் முன்னுரையின் பின் சங்கக் காரியதரிசியால் 12-ம் ஆண்டு நிறைவுவிழா அறிக்கையும் 13-ம் ஆண்டுக்குரிய அறிக்கையும் தனாதிகாரியால் வரவு செலவுக் கணக்கும் முறையே வாசிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. பின்னர் 14-ம் ஆண்டுக்குரிய உத்தியோகஸ்தர் நியமனம் நடைபெற்றது.

சிதம்பர சங்கீத வித்வான் லெக்ஷ்மண ஐயர் பிரதம சீடருளொருவராகிய திருநெல்வேலி ஸ்ரீமத். தே. அ. இராசுப்பிள்ளை அவர்களால் கேட்போர் ஆனந்தமடையுமாறு பக்கவாத்திய சகிதமாக "வள்ளி திருமணம்" கதாப்பிரசங்கம் செய்யப்பட்டது. கூட்டம் இரவு $10\frac{1}{2}$ மணியளவில் தேவாரபாராயணத்தோடு இனிது நிறைவேறியது.

---

# மழையைவருஷிப்பிக்க ஒப்பந்தம்

## மூன்றுநாளில் மழையை வரச்செய்து விட்டார்

## 2000 ரூபா உண்டியல்பெற்ற ஹாட்பீல்ட்

ருஷியாவில் மழை குறைவாக இருக்கும் 7 ஜில்லாக்களில் மழையையுண்டுபண்ண அங்குள்ள ஸ்தாபனமொன்று முயன்றுவருகிறது இது சாத்தியமா?

தென்னாப்பிரிக்காவிலுள்ள மந்திரவாதிகள் மழையை வருவிப்பதாகச் சொல்லப்படுகிறது; அவர்கள் உத்தரவு செய்யவேண்டியதுதான்; இடி மின்னலுடன் மழைபொழிகிறது.

ஆஸ்பர்ட்டாவில் வானம் வருஷிக்கும்படி செய்வதாக ஹாட்பீல்ட் என்பவர் அந்தப் பிரதேச வாசிகளுடன் ஒப்பந்தம் செய்துகொண்டார்; அங்கு மூன்று மாதங்களில் இரண்டு அங்குல மழைதான் பெய்வது வழக்கம். இதைவிட அதிக மழை பெய்யும்படி அவர் செய்தால் 2000 பவுன் எல்லைக்குட்பட்டு அங்குலத்திற்கு 1000 பவுன் அவருக்குக் கொடுக்கவேண்டுமென்பது ஒப்பந்தம்.

தனிமையான இடத்தில் அவருக்கு ஒரு குடிசையைக் கட்டிக்கொடுத்தனர்; அந்த இடத்திற்கு ஒருவரும் போகக்கூடாதென்று விதித்துவிட்டார்கள். ஆறுநாட்களில் மழையை வருவித்துவிடுவதாக ஹாட்பீல்டு சொல்லியிருந்தார். மூன்றாம்நாளே மழை ஆரம்பமாகிவிட்டது; 2000 பவுனுக்கு அவருக்கு உண்டியலும் கிடைத்துவிட்டது.

தென்னாப்பிரிக்காவில் பல இடங்களில் வருஷத்தில் அதிககாலம் மழை பெய்வதில்லை; இதனால் குடியானவர்கள் மிகுந்த கஷ்டங்களுக்காளாகி வந்தனர்; மழைச் சங்கத்தாரின் முயற்சியால் 1928-ம் வருஷத்தில் நல்லமழை பெய்தது.

நிபுணர்கள் மேகங்களுக்குமேலே விமானங்களில் சென்று, மின்சாரவிசை ஏற்றியிருந்த பொடி மணலைத் துப்பாக்கிகளில் கெட்டித்து மேகங்கள்மீது பிரயோகித்தனர். வெள்ளை மேகங்கள்மீது இவ்விதம் பிரயோகித்ததால் மழையும்பனியும் ஏற்பட்டதாம்.

சிறிது காலத்திற்குமுன் மேகங்கள் மீது வெடிகுண்டுகளைப் போடுவதன் மூலம் மழையை உண்டுபண்ண டெக்ஸாவில் ஒருவர் முயன்றார். குண்டுகள் வெடிப்பதால் குளிர்ந்த காற்று மேகங்களின்மீது வீசி மழை பெய்யுமென்பது அவர்கட்சி.

ஆகாயவிமானத்தில் அவர் 15000 அடி உயரம் சென்று, வெடிகுண்டுகளைப் போட ஆரம்பித்தார். ஆனால் ஒரு வெடிகுண்டு முன்னதாகவே வெடித்து அவருடைய விமானத்தில் தீப்பிடித்துவிட்டது. விமான ஓட்டி பத்திரமாக பூமியிலிறங்கிவிட்டார்; நிபுணருக்குமட்டில் நல்ல காயம் ஆயினும் அவருக்கு அதில் இருந்த நம்பிக்கை சிறிதும் ஆட்டப்போய்விடவில்லை.

### ருஷியாவில் முயற்சி

இந்த வருஷம் ருஷியாவில் விசேஷப் பரீட்சை செய்யப்படும். கோதுமை, கரும்பு, கறிகாய்கள், பழங்கள், புகையிலை, பருத்தி, தானியங்கள் இவை விளையும் பிரதேசங்களில் பரீட்சை நடைபெறும்; இந்தப் பரீட்சைகளின் பலனாக 20% முதல் 30% வரை அதிக மகசூல் கிடைக்குமென்று எதிர் பார்க்கிறார்கள்.

சாஸ்திர உதவியால் மழைபொழியச் செய்வது சாத்தியமாகிவிடின் பெருஞ்செலவில் ஜலத்தேக்கங்களைக் கட்டவேண்டிய அவசியமேயில்லை.

—பம்பாய் கிரானிகில்.

---

# அந்நிய நாட்டுச் செய்திகள்

### சர்வதேச சங்கமும் இத்தாலியும்

10-6-36

ஜெனிவாவிலுள்ள சர்வதேச சங்கம் அடுத்தமுறை கூடும்போது, அச் சங்கத்தார் இத்தலியருக்கு விரோதமாக இட்ட வியாபாரக் கட்டுப்பாட்டை நீக்கிவிடத் தவறினால் இத்தலியர் சர்வதேச சங்கத்தினின்றும் நீங்கிவிடுவது நிசமென்று சிக்னோர்கிருண்டி யென்னும் இத்தலிய மந்திரியொருவர் தெரிவித்திருக்கிறார்.

### சீனத்தில் உள்நாட்டுக் கலகம் மூளுமோ?

சீனத்திலே நான்கிங் மத்திய அரசினர் யப்பானோடு சீனம் மாறுபடவொண்ணாதென்ற கொள்கையுடனிருக்கின்றனர். ஆனால் தென் சீனத்திலிருக்கும் அரசியல் வாதிகள் யப்பான் சீனத்தை அடக்கியாள முயல்வதாலும் சீனத்திற்கு கஷ்டஞ் செய்வதாலும் யப்பானை இனிமேற் சீன விவகாரங்களிற் பிரவேசிக்க வொட்டாதபடி தடுக்க வேண்டுமென அபிப்பிராயப் படுகின்றனர். இதனால் இருபகுதியாருக்குமிடையில் உள்நாட்டுச் சண்டை ஏற்படுமென அறியக்கிடக்கின்றது.

### இடங்கள்தோறும் படைகள் செல்லுதல்

தென்சீனப்படை ஹெங்சௌ என்னும் பட்டினத்தை நோக்கிச்செல்ல, நான்கின் சைநியம் முந்தியே அப்பட்டினத்திற் போய் நிற்கின்றதாம்.

நான்கின் படை அங்குவந்து நிற்றலால் தெற்குக் குனன் என்னும் பட்டினத்தில் வசிக்கும் பிருத்தானியர் அந்நாட்டைவிட்டுப் போகவேண்டுமென்று அங்குள்ளபிருத்தானியதானிபர் தெரிவிக்க பிருத்தானியர் அப்பட்டினத்தை விட்டு நீங்கலாயினர்.

ஹெங்சௌ என்னும் பட்டினம் தென்சீன சைநியத்தாற் கைப்பற்றப்பட்டது. அவர்கள் அங்குள்ள தந்திக்கம்பிகள் முதலானவற்றைச் சேதித்தனர். நான்கின் படைகள் குனன்மாகாணத்தின் தலைநகராகிய சாங்ஷா எனும் பட்டினத்தை நோக்கிச் செல்லுகின்றன.

### இத்தலிய அதிகாரத்தை ஏற்றுக்கொண்டனர்

கிறில்லொஸ் என்னும் பகுதியிற் பிரதம குருவாகவுள்ளவர் அபிசீனிய பிரபுக்கள் 50பேருடன் தாங்கள் இத்தலிய அரசனையே தமது சக்கரவர்த்தியாக ஏற்றுக்கொண்டோமென்று அபிஸீனிய பிரதிகாவலராக இப்பொழுது கடமை பார்க்கும் கிருஸியானி முன் சத்தியஞ் செய்தனர். பிரதிகாவலரும் அவர்களுடைய சமய ஒழுங்குகள் கொள்கைகளெல்லாம் இத்தலிய அரசினரால் பாதுகாக்கப்படுமென வாக்களித்தாராம்.

முஸோலினி விரைவில் அபிஸீனியாவுக்குச் செல்வாரெனச் சொல்லப்படுகின்றது.

### அபிஸீனிய சக்கரவர்த்தி

லண்டன் நகரிற் சகல உபசாரங்களோடும் வரிசைகளோடும் இருக்கும் அபிஸீனிய சக்கரவர்த்தியை அரச குமாரராகிய குளோஸ்டர் டியூக் சென்று கண்டு தொன்மை பாராட்டினர்.

---

### காமன்ஸ் ஸ்தானம்

லண்டன், ஜூன் 9

மாஜி மந்திரி மிஸ்டர் ஜே. எச். தாமஸ் காமன்ஸில் ஸ்தானத்தை வகித்திருப்பாரா வென்பது வியாழக்கிழமை விவாதத்திற்குப் பிறகுதான் தெரியவரும். தாம் காமன்ஸில் பேசப்போவதாக அவர் கூறியுள்ளார். ஸர் பட்ஸ் என்ன செய்வாரென்று தெரியவில்லை.

### பலஸ்ரயின் கலகம்

10-6-36

அமக்டொனுக்குச் சமீபமாகவுள்ள எஸ்ட்ருலோன் என்னுமிடத்தில்வசிக்கும் யூதரைப்படைக்கலங்களுடன் அராபியர் சென்று தாக்கினர். ஆனால் அதனையறிந்த பிருத்தானியபடை கலகக்காரரை எதிர்த்துச்சமர்விளைத்துப் புறங்கண்டது.

மலைச்சாரல்களில் மறைந்துநின்று அராபியர் யூதர்களையும் பொலிசாரையும் துப்பாக்கிகளினாற் சுட்டனர். இரு அணியான பிருத்தானியப் படை மலைச்சாரலுக்கு இலக்காகச் சுட்டுக் கலகக்காரரைப் பின்னிடச் செய்தன இதில் அராபியர் எத்தனை பேர் மாண்டாரென்பது சொல்லத் தெரியவில்லை.

பீர்ஷெபாவிலுள்ள லார்ட் அலன்பியென்னும் பிருத்தானிய சேனாபதியின் உருவச்சிலைமீது அராபியர்வெடிகுண்டு எறிந்தமையினால் அச்சிலை சிறிது சிதைவுற்றதாம்.

### அராபியர் சிறை பிடிக்கப்பட்டமை

கலகந்தொடங்கிய காலந் தொடக்கம், அதாவது மே௴ 19௳ தொடக்கம், இற்றைவரையில்சிறைப்படுத்தப்பட்ட அராபியரின் தொகை 1490 பேராம். இவர்களுள் 754 பேர் விசாரணைசெய்து குற்றவாளிகளெனக் காணப்பட்டனர். 333பேரின் விசாரணை இன்னமும் முடியவில்லை. 226 பேர் நிரபராதிகளென விடுதலை செய்யப்பட்டனர்.

11-6-36

### கலகக்காரர் புகைரதப் பாதையைச் சேதஞ் செய்கின்றனர்

அராபிய கலகக்காரர் பிருத்தானிய சைநியத்தை ஏற்றிக்கொண்டு ஒரு புகைரதத் தொடர் வந்தபோது இடையிற் பாதையைச் சேதப்படுத்தி வண்டிகள் தண்டவாளத்தை விட்டு விலகச் செய்தனர். பின்னரும் ஒரு புகைரதத்தொடர் சைநியத்தை ஏற்றிக்கொண்டு போனபோது துல்க்ரும் என்ற இடத்திலே இப்படிச் செய்துவிட்டனர். ஜெருசலேமுக்கு 40 மைல் தூரத்திற்கப்பால் ஒரு "பலஸ்த்" புகைவண்டி சென்றபோது ஒரு வெடிகுண்டு பாதையில் வெடித்ததாம். சைநியத்தை ஏற்றிய புகைவண்டித் தொடர் அந்த பலஸ்த் புகைவண்டியைத் தொடர்ந்து வந்ததாம்.

12 6-36

கல்கிலியா என்னுமிடத்தில் பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு ஒரு புகைரதத் தொடர் ஓடும்போது கலகக்காரர் யாரோ வெடிகுண்டை வீசியமையினால் அப்பிரயாணிகளுள் நான்குபேர் மோசமான காயமடைந்தனர். 12 யூதரும் ஒரு அராபியனும் அற்பகாயமடைந்தனர்.

### பிருத்தானிய பொலிஸ் உத்தியோகத்தர் சுடப்பட்டார்

பிருத்தானிய பொலிஸ்உத்தியோகத்தரைக் கலகக்காரர் இருமுறை தாக்கினர். உபபொலிஸ் தலைவராகிய மிஸ்டர் அலன் ஸிக்றிஸ்ற் என்பவர் ஒரு ஆங்கில பொலிசுடன் கூடிக்கொண்டு பொலிஸ் படையைச் சோதிக்கச் சென்றபோது, கலகக்காரர் இருவர் இடைவழியிற் பதுங்கி நின்று அவர்மேற் குண்டுப் பிரயோகஞ்செய்தனர். பொலிஸ் தலைவர் மார்பிலும் தோளிலும் குண்டு புதையப்பெற்றார். துணையாகச் சென்ற பொலிஸ் கலகக்காரர்மீது துப்பாக்கிப் பிரயோகஞ்செய்ய ஒருவன் குண்டு வீழ்ந்து பின் வைத்திய சாலையில் மாண்டான்.

---

# அபபாஸ் டயாப்ஜி மரணம்

## மரணத்திற்கு மார்படைப்பே காரணமாம்

புதுடில்லி, ஜூன் 9— அலிகார் சர்வகலாசாலை ஆசிரியர் மூகம்மது ஹபீப் முசௌரியிலிருந்து பின்வருமாறு தந்தியனுப்பியிருக்கிறார்:—

பிரபல காங்கிரஸ்தலைவரான ஜனாப் அப்பாஸ் டயாப்ஜி இன்று பகல் மார்படைப்பு காரணமாக மாண்டு போனார்.


அவர் [1854-ம் வருஷம் பிப்ரவரி மாதம்முதல் தேதி பிறந்தார். 11வயதிலேயே அவர் லண்டன் சென்று மெட்ரிகுலேஷனில் தேறி பிறகு பாரிஸ்டராகி பரோடா ஹைகோர்ட்டு ஜட்ஜாக அமர்ந்தார். உப்புச் சட்டமறுப்பு இயக்கத்திலும் ஒத்துழையாமை இயக்கத்திலும் முழுமூச்சாகக் கலந்துகொண்டார். 80 வயதிலும் இவர் காந்திஜீயின் சத்தியாக்கிரஹத்தில் ஈடுபட்டு தர்சனா உப்பள முற்றுகை சமயத்தில் கைதியாகி 9 மாதக் கடுங்காவல் தண்டனை அடைந்தார்.]

நீங்கள்

# ஆஸ்ரின்

## செவினை வாங்குவதே

புத்திசாலித்தனம் என்பதற்குரிய நியாயங்கள் வருமாறு:—



டி லக்ஸ் சலூன் ரூபா 2 625/—

1 மிக மலிவாகப் பிரயாணம் செய்தற்கு உதவியாகின்றது
2 செலுத்துதற்கு எளிது; ஓரிடத்தில் நிறுத்திவைப்பதற்கு எளிது
3 தொந்தரவில்லாதது; அதைச் செலுத்துதற்கு அதிக யந்திர அறிவு தேவையில்லை.
4 ஐந்தோ, ஆறோ அல்லது இன்னும் அதிகமான வருஷங்களுக்கோ அசைவின்றிப் பாவிக்கக்கூடியது
5 அதனினும் மும்மடங்கு அதிகமான கார்களிலுள்ள சாமான்கள் எல்லாம் உடையது.
6 இப்போதுள்ள சலூன் கார்களுக்குள் மிகவும் பாரமில்லாத கார்—இதனால், ஓடும் செலவும் குறையும்.
7 சென்ற பன்னிரண்டு வருஷங்களாக, இதிலும் பார்க்கச் சிறந்த 'பேபி' கார் வந்தது கிடையாது.

விலை ரூபா 2,150/- இலிருந்து.

மற்றக்கார்களை நீங்கள் விலைகொடுத்து வாங்குகிறீர்கள். ஆனால், ஆஸ்ரின் காரில் செலவிடும்பணமோ பழுதற்ற பணமாகும்.

## உவாக்கர் ஸன்ஸ் அன்கோ, லிமிற்றட் கொழும்பு.

யாழ்ப்பாணத்திற்கும்,
திருக்கோணமலை, முல்லைத்தீவு, புத்தளம், மன்னார், அநுராதபுரம் ஆதிய இடங்களுக்கும் சோல் ஏஜெண்ட்ஸ்

வி. செல்வத்துரை & சன்ஸ்
அதிகாரம் பெற்ற ஏஜன்ஸ்
ஆஸ்பத்திரி ரோட்டு, யாழ்ப்பாணம்.

Y137. 19-8-35. — 18-8-36.



வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

## கனிஷ்ட பாடசாலை விடுகைத் தராதரப்பத்திர வகுப்பு (1937) [J·S·C·] இலக்கியக் குறிப்பு,

இது சென்னைச் சர்வகலாசங்கத்தாரால் 'வித்துவான்' பட்டம் வழங்கப்பெற்றவரும், இயற்றமிழ்ப் போதகாசிரியருமாகிய வண்ணார்பண்ணை, திரு. ந. சுப்பைய பிள்ளை அவர்களால் இயற்றப்பெற்றது. பதவுரை, கருத்துரை, (எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், சொல்லிலக்கணம், சொல்நயம், பொருள் நயம், அணிநயம் முதலியவற்றைவிளக்கும்) குறிப்புரை முதலியன அடங்கியுள்ளது.

1937-ம் ஆண்டு ஆங்கில J. S. C. வகுப்பிற் பயிலும் மாணவருக்கும் ஆவசியகம் வேண்டியது. விலை சதம் 80.

## செந்தமிழ் வாசக சிந்தாமணி

உயர்தர வகுப்புகட்கு உபயோகமானது. அரும்பத விளக்கம் செய்யுள்கட்கு உரை நன்கு எழுதப்பட்டுள்ளன.

விலை சதம் 75

சண்முகநாதன் புத்தகசாலை அதிபர்கள்.
Mis 12. 13-4-36.) தி வண்ணார்பண்ணை.



## வீ. பீ. நிக்கலஸ் அன் சன்ஸ் (வங்கி)

(1920-இல் ஸ்தாபிக்கப்பட்டது.)

2-ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம்.

தந்தி விலாசம்: "ஜாவ்ளுபாங்க்" தெலிபோன் நில. 27.

உண்டியல்:—கொழும்பு, இந்தியா, மலாயா முதலிய இடங்களுக்கு நேராகவும் உலகத்தில் ஏனைய பிரதான இடங்களுக்கு விசேஷ ஒழுங்கு செய்தும் உண்டியல் கொடுக்கப்படும்.

கடன்:—நகைகள் அடைவாகப்பெற்றுக்கொண்டு 12வீதம் வட்டிக்குப்பணங்கொடுக்கப்படும். தகுந்த பிணையுடன் தினசரிப் பற்றுவரவுக் கணக்கின் பேரிலுங் கடனெடுக்கலாம்.

பணமாற்று:—இந்திய சிங்கப்பூர் நாணயங்கள், கோட்டுக்கள் வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கப்பற்றண்டு:—உலகத்திலுள்ள எந்தப் பிரதான துறைமுகத்திலும்போய் இறங்கத்தக்கதாக, கமிஷனின்றி கப்பற்றண்டுகள் எடுத்துக்கொடுக்கப்படும்.

மேற் கூறப்பட்டவைகளும் இன்னுஞ் சகலவித வங்கிமுயற்சிகளும் எமது யாழ்ப்பாணநாட்டினரின் வசதிக்கேற்ற பிரகாரஞ் செய்யப்படும்.

எஸ். பீ. ஜோசேப்,
(Y. 138. 21.10-35—20-10-36.) தி மனேஜர்.


## சந்தோஷகரமான முடிவு

### ஸ்ரீதன மோசடி வழக்கு திருமணத்தில் முடிந்தது

பலப்பிட்டி ஜூன் 8

தொராவே வெலிகம்பிட்டி வாசியான பி டான் சைமன் செனவிரத்ன என்பவர் வெரகொடையைச் சேர்ந்த லீலாவதி அமரசிங்க என்ற யுவதியை மணம் செய்துகொள்வதாக ஏற்பாடு செய்து திருமணத்திற்குச் சிறிது நேரத்திற்கு முன்னதாகப் பெண்வீட்டாரிடமிருந்து ஸ்ரீதனப்பணம் பெற்றுக்கொண்டு தப்பியோடிய விபரீதச் சம்பவம் ஏற்கனவே இந்துசாதனத்தில் வெளியிடப்பட்டதை நேயர்கள் அறிவார்கள். இதுபற்றி மணமகன் ஸ்ரீதனமோசடித் தொகையை மோசடி செய்ததாகப் பெண்ணின் சகோதரன் தொடுத்திருந்த வழக்கு இன்று பலப்பிட்டிப் பொலீஸ்கோர்ட்டில் அழைக்கப்பட்டது.

திருமண வீட்டிலிருந்து ரிஜஸ்திரார் காரியாலத்திற்குச் செல்லும் வழியில் திடீரெனமறைந்துகொண்ட மணமகனுக்கும் வெகு ஆவலுடன் காத்துக்கொண்டிருந்த மணமகளுக்கும் திருமணம் இனிது நிறைவேறியதாகவும் தம்பதிகளை ஒன்றுசேர்த்து வைத்ததற்கு தனக்கு ஒரு சன்மானம் கூட கொடுக்கப்படவில்லையென்றும் பெண்ணின் சகோதரன் தரப்பு நியாயவாதி திரு. பிரான்ஸிஸ் டி சொய்ஸா தெரிவித்தார்.

இரு கட்சியினரும் தற்போழுது சமாதானமாக விருப்பத்துடனிருப்பதாகவும், ஆகவே எதிரியின்மேல் தொடுக்கப்பட்ட வழக்கு வாபீஸ் பெற்றுக்கொள்ளுவதற்கு வாதிக்கு உத்தரவு கொடுக்க வேண்டுமென்றும் கூறப்பட்டது.

நீதவான் அந்த விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டதுடன் இச் சம்பவம் மிக்கசந்தோஷகரமாக முடிவானதைப்பற்றி தான் மகிழ்ச்சியடைவதாகவும் குறிப்பிட்டார்.


## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பலவியாதிகளைக்குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுபத்திரங்களுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில்உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இசனுஉண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, ஈலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாலு, சாலாமூஸ்லி, சப்பேமுத்ஸலி பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அபகாந்தசெந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேகபுஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு. பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயுஇன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும் ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் ருதுகவாய்வு, பிரசவஅறையில் உண்டாகும் நோய்கள்தீர்ந்து தேகபுஷ்டியும்பலமும் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரை ருத்தலுக்கு ரூபா பத்து. கால் ருத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவு பிரத்தியேகம்,

சிங்கப்பூர்பினுக்கு முதலிய தொடுவாயிராச்சியப் பகுதிக்கு வி. பீ. சட்டம் இல்லாததனால் முன் மணிஆடர் அனுப்புதல்வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
வெருகல் ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்ற்,
மட்டக்களப்பு,
Y46 1-1-36 to 31-12-36) சிலோன்.


## சைவ பரிபாலன சபை.

### 1908-ம் 09-ம் ஆ௵களில் நிகழ்ந்தவை.

(8-6-36 ன் தொடர்)

சக்கிரவர்மா யாழ்ப்பாணத்திற் பல வருடங்களிலும் பொழிந்த பிரசங்கமாரியானது இந்துக் கல்லூரி அதிகாரசபையாருக்கும் மற்றைய உள்ளூர் வெளியூர்களிலிருந்த சைவ நன்மக்களுக்கும் பெரும் கிளர்ச்சியை யுண்டாக்கியது. சக்கிரவர்மா வே கொழும்பு முதலான வெளியூர்களுக்கும் சென்று இந்துக் கல்லூரிக்காகப் பணம் சேர்ப்பதற்கும் சித்தங் கொண்டிருந்தாராம்.

"He will not, he says, return to Jaffna from his collecting tour, without realising three lakhs of Rupees in Ceylon, India, and the Straits........"

சக்கிரவர்மாவோடு கூடச் செல்வதாக இருந்த இந்துக் கல்லூரி மனேஜர் வி. காசிப்பிள்ளைக்கு திடீரென நேர்ந்த சரீர அசௌக்கியம் இதற்குத் தடைவிளைத்ததாம். ஆயினும், சிறிது சௌக்கியமுற்றவுடன் அதாவது டிசம்பர்மீ 30௳ அவரும் கல்லூரி அதிகார சபைத் தலைவர் கௌரவ அ. கனகசபையும், கிருவாகசபை அங்கத்தவருள் ஒருவராகிய இ. கந்தையா முதலியாரும் அத்துவக்காத்து க. பாலசிங்கமும் இந்துக் கல்லூரிக்குப் பணம் சேர்ப்பதற்காகக் கொழும்புக்குச் சென்றார்கள். அங்கு சென்ற ஐந்து நாட்களுள் 9325 ரூபா ரொக்கம் சேரலாயிற்று. அத்தொகையில் 5000 ரூபா உதவியவர் நாஷனல் வங்குச் சிறாப்பர் க. ஞானசேகரமாவர். கரவருஷ சித்திரைமீ 23௳ (5th May 1891) இந்துக்கல்லூரிக் கட்டடத்துக்கு அத்திபாரம் இட்ட காலத்திலேயே அத்திபாரம் இட்டு கதவுநிலை மேல் மட்டம் வரையில் கட்டப்பெற்றுக் குறையாயிருந்த கல்லூரி வடபாகக் கட்டடம் மேற்சொன்ன க. ஞானசேகரம் உதவிய 5000 ரூபா கொண்டு பூர்த்திசெய்து அக்காலத்திலிங்கு வந்திருந்த சேர் ஹென்றி மக்கலம் தேசாதிபதியால் 1908ஆ௵ ஆனிமீ 5௳ திறந்து வைக்கப்பெற்றது.

"His Excellency Sir Henry Mc.Callum, as previously arranged in the programme visited the Hindu College accompanied by His Staff and the Government Agent on Friday 5th instant at 10 A. M. and was received at the entrance by the Directors of the College with whom His Excellency shook hands on being introduced by the Hon'ble Mr. Kanagasabai, President of the Board of Directors. There was a Pandal erected in front of the College which was very tastefully decorated for the occasion. The Governor was conducted to the Hall, erected at a cost of Rs. 5000 by the munificence of Mr. C. Gnanasakaram, Chief Cashier, National Bank, Colombo, which forms the northern wing of the College. He opened the Hall with a Silver key handed to him by Mr. Kanagasabai and declared it open. The front wall of the entrance room contains a marble tablet bearing the inscriptions: "Gnanasakaram Hall, erected by Mr. C. Gnanasakaram, Chief Cashier, National Bank of India Ltd., Colombo, 1908", and in the inner Hall is hung in a conspicuous place the enlarged portrait of Mr. Gnanasakaram. Inquiries were made by His Excellency as to what use the Hall would be applied and what it had cost Mr. Gnanasakaram. His Excellency was then taken to the Dais in the big Hall of the College where Mr. N. Selvadurai B. A., Principal of the College, welcomed His Excellency giving a brief history of the College, and referring to the munificance of Mr. Gnanasakaram in erecting the Hall that bears his name. He also urged on His Excellency the necessity of encouraging higher education in Ceylon by the establishment of a University. The Governor thanked the Principal for the reception and promised due consideration to the requests made."

#### நான்காவது வருஷாந்தக் கூட்டம்

இந்துக்கல்லூரி அதிகாரசபையாரின் நான்காவது வருஷாந்தக் கூட்டம் 1908ஆ௵ ஆவணிமீ 1௳ கூடிற்று. அப்போது கௌரவ அ. கனகசபை அக்கிராசனாதிபதியாகவும், வி. காசிப்பிள்ளை உப அக்கிராசனாதிபதியாகவும், அ. சபாபதி இலேககராகவும், வ. மு. முத்துக்குமாரு உதவி இலேககராகவும், அ. சின்னப்பா தனாதிகாரியாகவும், சி. வை. சின்னப்பாபிள்ளை கணக்குப் பரிசோதகராகவும், இ. கந்தையா முதலியார், சி. கந்தையா, சி. தம்பையாபிள்ளை, கல்லூரிப் பிரதமாசிரியர் என்பவர்கள் மற்றைய கிருவாகசபை அங்கத்தவராகவும் தெரிவு செய்யப்பெற்றார்கள்.

#### வரவு செலவு.

1907ஆ௵ ஆடிமீ 1௳ முதல் 08 ஆ௵ ஆனிமீ 30௳ முடிய வந்த மாணவர் சம்பள வரவு ரூ. 4194 சதம் 75-ம், அரசினர் உதவி நன்கொடைப்பணம் ரூ 2881ம், ஸ்கலர்சிப்பால் ரூ 1000ம், சைவ நன்மக்கள் பலர் உதவிய நன்கொடையால் ரூ 4331 சதம் 41ம், பல சில்லறையால் 1165 சதம் 38½ம் ஆக ரூ. 13572 சதம் 54½ ஆனது. இக்காலத்தில் உபாத்தியாயர் வேதனம் ரூ 7194 சதம் 18ம், கல்லூரிக் கட்டடத்தில் ரூ 7729 சதம் 42½, பல சில்லறையாய் ரூ 411 சதம் 05ம்½ ஆனது.

#### கதாப்பிரசங்கம்

கொழும்புக்குச் சென்றிருந்த ந. சங்கரசுப்பையர் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது இந்துக் கல்லூரி மண்டபத்திலே இச்சபையின் ஆதரவில் 1909ஆ௵ பங்குனிமீ 5௳ மகாமகபுண்ணிய தினத்தன்றும், சித்திரைமீ 31௳யும், வைகாசிமீ 7௳யும், சுந்தரமூர்த்திநாயனார் சரித்திரத்தை மூன்று பாகமாக, பக்கவாத்திய சகிதமாகப் பிரசங்குஞ் செய்துள்ளார்.

#### மகாசபைக் கூட்டம்.

1909ஆ௵ மேமீ 15௳ இந்துக் கல்லூரி மண்டபத்திலே கூடிய இச்சபையின் மகாசபைக் கூட்டத்துக்கு அனேக சைவப் பிரபுக்கள் வந்திருந்தார்கள். அத்தருணம் இ. கந்தையா முதலியார் அக்கிராசனாதிபதியாக வரிக்கப்பெற்றார்.

"1903ஆ௵ ஜூலைமீ 11௳ கூடிய மகாசபைக் கூட்டத்தினதும் 1907 ஆ௵ தைமீ 7௳ கூடிய கிருவாகசபைக் கூட்டத்தினதும் வர்த்தமானங்கள் வாசிக்கப்பட்டுச் சபையாரின் அங்கீகாரமும் அக்கிராசனாதிபதியின் கையெழுத்தும் பெற்றன.

ஸ்ரீ அ. சபாபதி அவர்கள் பிரேரிக்க ஸ்ரீ சி. தம்பையாபிள்ளை அவர்கள் அநுவதிக்க பின்வரும் பிரபுக்கள் சபையின் அங்கத்தவர்களாகத்தெரிவுசெய்யப்பட்டனர்:— ஸ்ரீ ஆ. கதிரவேலு, கா. அருளம்பலம், வை. துரைசுவாமி, நா. செல்வத்துரை, சு. கனகசபை, சி. கனகரத்தினம், வ. மு. முத்துக்குமாரு, C. K. சுவாமிநாதன், க. சிவப்பிரகாசம், அ. விசுவநாதன் அ. அப்பாத்துரை, சி. கந்தையாபிள்ளை, சித. மு. ப. சிதம்பரநாதச் செட்டியார், ஆ. மு. சோமாஸ்கந்தர், பெ. கார்த்திகேசு, வை. வைத்தியலிங்கம்.

—(தொடரும்.)

# வெள்ளவத்தை மில்லில் செய்யப்படும் இலங்கா உற்பத்திச் சீலைகளையே வாங்குங்கள்!

அதனால், எப்போதும், மிகச் சிறந்ததும் மிக மலிவானதும் ஆகிய சீலைகளையும் உங்கள் வீட்டுத் தேவைகளுக்கு வேண்டிய எவ்வகைத் துணிகளையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம் என்பதை முற்றும் நம்புங்கள்

இலங்கையின் நாலுபக்கங்களிலும் நம்மிடம் வாடிக்கையாகப் புடவைகளை வாங்குவோர் பல்லாயிரக்கணக்கானோர் உளர்.

நமது புடவைகள் திறமானவையும் மலிவானவையும் என்பதற்கு அவை ஏராளமாக அழிவதே தக்க சான்றாகின்றது.

1936-ம் ஆண்டில் ஜனவரி, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் என்னும் நான்கு மாதங்களிலும் பின்வருமாறு நமது புடவைகள் விலைப்பட்டிருக்கின்றன:—

| வேட்டிகளும் சால்வைகளும் | சேலைகள் | டுவீல் துணிகள் | பெட்ஷீட்டுகள் |
|---|---|---|---|
| 1,95,467 பீசுகள்; லாங்குளோர்ச் 62,777 யார் | 1,9880 பீசுகள்; சேர்ட்டுகள் 1,10,931 யார் | 68,486 பீசுகள்; ஷீட்டுகள் 7,746 யார் | 37,128 பீசுகள்; வேறுவகைத் துணிகள் 12,00,000 யார் |

நம்மிடம் வாடிக்கையாகத் துணிகளை வாங்கி நம்மை ஆதரித்தவர்களுக்கு நாம் நன்றி செலுத்துவதோடு, இன்னும் அவர்கள் அவ்வாறே ஆதரிப்பார்களெனவும் நம்புகின்றோம்.

### சேலைகள்

பலவிதமானநிறங்களோடு கூடிய தூய வெண்ணிறச்சேலைகள் விலைகள் தனித்தனி ரூபா 1-75 லிருந்து ரூ. 2-65வரை யாருக்குத்தக்கபடி

பல்வேறு நிறங்களில் அழியாத சாயமுள்ள சேலைகள் விலைகள் தனித்தனி ரூபா 2 லிருந்து ரூபா 2-90 வரை. யாருக்குத்தக்கபடி

பல்வேறுநிறங்களில், பட்டுக்கரைகளையுடைய சேலைகள் விலைகள் தனித்தனி ரூபா 1-50 லிருந்து ரூ. 2-50வரை. யாருக்குத்தக்கபடி

பல்வேறு தினுசுகளில் பட்டுக்கரைச் சேலைகள் விலைகள் தனித்தனி ரூபா 2-10 லிருந்து ரூ. 4-25வரை. யாருக்குத் தக்கபடி

### வேட்டிகள்

பட்டுக்கரை பிளீச்வேட்டி 50× 3½யார் தனித்தனி ரூ 1-45
" " 50× 4 யார் தனித்தனி ரூ. 1-55
ஷை வேட்டிகளுக்குப் பொருத்தமானபட்டுக்கரைச் சால்வைகள் 40×2½யார் தனித்தனி80சதவீதம்
பான்ஸிபிளீச்துட்டிகள் 40×3½யார் தனித்தனி ரூ.1-10 வீ
" " " 46× 4யார் தனித்தனி ரூ 1-20வீதம்
அவற்றிற்குப் பொருத்தமான பான்ஸி சால்வைகள் 40× 2½யார் தனித்தனி 70 சதவீதம்

### சாரங்கள்

அழகான குறிகளோடு கூடிய புதுத்தினுசுச் சாரங்கள் தனித்தனி 50 சதத்திலிருந்து ரூபா 1-50வரை

### கம்பாயங்கள்

குறிகளுள்ள தினுசுகள் 40 சதத்திலிருந்து ரூபா 250 வரை

### கிரேத் துணிகள்

முரட்டுப்பாவிப்புக்குச் சிறந்தவை; உடைக்குத் திருப்திகரமானவை×; எளிதில் வெள்ளையாகக் கூடியவை; விலைகள் யார் ஒன்றுக்கு 18 சதத்திலிருந்து 50 சதம் வரை.

### லோங்குளோத்ஸ்

வீட்டுப்பாவிப்புக்குள்ள ஒவ்வொரு தேவைக்கும் விலைகள் யார் ஒன்றுக்கு 20 சதத்திலிருந்து 50 சதம் வரை

### பிளீச் பண்ணுத பெட் ஷீட்டுகள்

54, ×80, சோடி ஒன்றுக்கு ரூ. 2-25
72, ×80, " " ரூ. 3-10

### பிளீச் பண்ணிய பெட் ஷீட்டுகள்

54, ×80 சோடி ஒன்றுக்கு ரூபா 3-00
72, ×90 " " ரூபா 4-00

## சில்லறை வியாபாரக்கடை, பெரியகடை, யாழ்ப்பாணம்

தி சிலோன் ஸ்பின்னிங் அன்வீவிங் கம்பெனி லிமிட்டெட்டின்
முதலாவது மோர்ட்கேஜடிபெஞ்சர்கள் வைத்திருப்போருக்கு டிரஸ்டிகள்

# Nethrananda Thailaya

**Ceylon's Premier Curative Medicine Oil.**

## நேத்திரானந்த தைலம்.

இலங்கையில் மிகவும் சித்திபெற்ற மருந்து எண்ணெய்களில் இதுவேமுதல்தரம்.

6 அவுன்ஸ் போத்தல் விலை ரூபா 2-50.

தபாற்கூலி 45 சதம்.



இது சிரசில் உண்டாகும் மண்டையிடியை ஐந்து நிமிஷத்திற்குள் நீக்குவதோடு கண்ணில் உண்டாகும் சகல எரிச்சல், மங்கலான பார்வை, நீர்வடிதல், சதைபடர்வு, என்னும் சகல கண்வியாதிகளையும், தலைமயிர் உதிர்தல், தலை மொட்டை, தலை நரை, பீனிசம் என்பவைகளையும் போக்கி தலைமயிரை நீளமாய் வளரச்செய்து பளபளப்பையும் கொடுக்கிறது. இதை உபயோகித்தால் கண்ணாடி போடத் தேவையில்லை. சிறியோரும் பெரியோரும் வயது வித்தியாசமின்றி உபயோகித்து வேண்டிய வேண்டிய சுகம் பெறக்கூடும்.

இலங்கையிலுள்ள கனவான்களாகியபெரிய உத்தியோகஸ்தர்களும், வியாபாரிகளும், சீமான் சீமாட்டிகளுமான யாவரும் அச்சமின்றி உபயோகித்து இதன் அரிய குணத்தைக் கண்டிருக்கிறார்கள், வெளிவந்திருக்கும் ஏனைய போலித்தைலங்களைப்போல் இதை நினையாமல் உடனே வாங்கி உபயோகியுங்கள்.

பனிதர் முக்கியமாகத் தெரிந்துகொள்வதும், மாதர் அதிகமாக விரும்புவதும் 35 வருஷங்களாக யாவராலும் அதிகமாகப் புகழப்படுவதும்

இந்த நேத்திரானந்த தைலமே.

இந்தச் சிறந்த எண்ணெய்க்கு நீண்ட பெயர் உண்டு என்று ஊர்ந்தறிகிற ஒவ்வொரு சிறபிள்ளைக்கும் தெரியும். சிரசில் ஏற்படுவதான தலை மயக்கம், கண் எரிவு, தலைவலி, இள நரை, தலைவழுக்கை, தலைமயிர் உதிர்தல் முதலிய எந்த வியாதிக்கும் இது ஏற்ற நிவாரணி என்று பலரும் அறிந்து உத்தரவாதம் செய்யப்பட்டது. நேத்திரானந்த தைலத்தினால் யாவும் சுகமாக்கப்படுகிறது. இது தற்காலத்தில் செய்யப்படும் போலித் தைலத்தைப் போலல்ல இலங்கையிலும் பிறதேசங்களிலும் நன்கு பரீட்சிக்கப்பட்டுள்ளது.

தலைமை ஸ்தானம்:—
வைத்தியசேகர முதலியார்,
டப்ளியு. டானியல் பெர்ணண்டோ,
ஸ்ரீவேத வளவும், பாணதுறை.

கிளை ஸ்தானம்:—
பௌத்தமந்திர வைத்தியசாலை.
நோரிஸ்ரோட், கொழும்பு—இலங்கை
காஸில் ஹோட்டல், கண்டி.

தந்தி விலாசம்:—வேத முதலியார் பாணதுறை.

(H 332, 20-3-36 to 19-9-36)

## "NEW ERA SERIES"

OF

## School Text Books

பாடசாலைகளுக்குரிய
புதிய தமிழ் நூல்கள்

**செந்தமிழ்க் கருவூலம் (1—3)**

**கதாவாசகம்**

முதலியன.

அரசினர்
துவிபாஷா ஆசிரியர்
திரு. மா. பீதாம்பரன் அவர்கள்
Hd. Master (Ag.)
R. S. School,
Sainthamaruthu.

இயற்றியவை.

விரைவில் வெளிவரும்.

Q. 22. 1-5-36—31-7-36). (ஜ)

## விளம்பர விகிதம்.

வியாபாரத்தை விருத்தி செய்யவேண்டில் இந்துசாதனப் பிரசுரங்களில் விளம்பரஞ் செய்க.

| | | | |
|---|---|---|---|
| 1 | பந்தி (கலம்) | ரூபா | 10-00 |
| ½ | " " | " | 5-50 |
| ¼ | " " | " | 3-00 |
| 1 | அங்குலம் | " | 1-00 |

அடுத்த பிரசுரங்களிற் பாதி விகிதம்.

காலம் நீடித்த விளம்பரங்கள், விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்துமூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

மானேஜர்
சைவப்பிரகாசயந்திரசாலை

## யாழ்ப்பாணம் ஐக்கியலாப நிதி.

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 134,367 00

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

**பங்குப்பணங் கட்டுமுறை.**

பங்கொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு.**

எச்சமிதி சராசரி 500 ரூபாவிற்குக்குறையாமல் இருக்குமானால் 1விகித வட்டியுடன் தினசரிப்பற்றுவரவு செய்யலாகும்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்.**

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்களையுடைத்து ஏற்படும் வட்டியும் முறையே 3 விகிதம், 4 விகிதம், 6 விகிதம், 8 விகிதமாகக் கொடுக்கப்படும்

**உண்டியல்கள்.**

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும் தொடுவாய் இராசியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாய்ப்பான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன

இந்தியநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

**கடன்.**

நகைகளை ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். மாசந்தோறும் கட்டுபவர்களுக்கு 10 விகிதமான வட்டியும், ஏனையோர்க்கு 12 விகிதமான வட்டியும் விதிக்கப்படும் (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக் கொடுக்கலாம்.

காணி ஈடாக வைத்துக்கொண்டு பிணையுடன் கடனுக்கலாம். (இந்தக்கடனையும் பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாகும்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

சி. செல்லப்பா.
மானேஜர்.

(Y-203, 21-11-35—20-11-36) (ஜ.)

## படுபயன் வெஃகிப் பழிப்படுவசெய்யார் நடுவன்மை நாணுபவர்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம்வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna: on Monday, June 15th 1936.